விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வ்ள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 04 செவ்வாய்க்கிழமை (18.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 089

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# தண்டனை கொடுப்பதின் மூலமே சட்டத்தின் ஆட்சி நிலைபெறும்

## பிரிட்டன் வெளிவிவகார செயலர் வில்லியம் ஹேக் சுட்டிக்காட்டு



(லண்டன்)

இலங்கையின் இறுதிப் போரில் இழைக்கப்பட்ட யுத்த குற்றச் செயல்களுக்கு தண்டனையை பெற்றுக் கொடுப்பதன் மூலமே அங்கு சட்ட ஆட்சியை நடைமுறைப் படுத்த முடியும் என குறிப்பிட்ட பிரித்தானிய வெளிவிவகார செயலர் வில்லியம் ஹேக், மக்கள் எதிர்பார்க்கும் வெளிப்படையான அரசியலை இலங்கை அரசு கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் சர்வதேச சுயாதீன பொறிமுறையொன்றை கோரும் பிரேரணைக்கு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பினர்கள் ஆதரவளிப்பதற்கான காரணங்கள் நான்கையும், ஹேக் தனது ஆக்கத்தில் சுட்டிக்

20 ஆம் பக்கம் பார்க்க..

## அமெரிக்க தீர்மான வரைவு ஜெனிவாவில் இன்று பேச்சு

(ஜெனிவா)

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்துள்ள திருத்திய தீர்மான வரைபு தொடர்பாக, இன்று செவ்வாய்க்கிழமை ஜெனிவாவில் உள்ள அமெரிக்கா வதிவிடப் பிரதிநிதியால் கலந்துரையாடல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை இந்த கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

கடந்த 14-ம் திகதியன்று உறுப்பு நாடுகளின் பார்வைக்காக, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் விநியோகிக்கப்பட்ட திருத்தப்பட்ட இரண்டாவது தீர்மான வரைபின் உள்ளடக்கம் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும்.

ஏற்கெனவே, கடந்த 3-ம் நாள் முன வைக்கப்பட்ட முதலாவது தீர்மான வரைவு குறித்து, இரண்டுமுறை, முறைசாராக் கூட்டங்களில்,

19 ஆம் பக்கம் பார்க்க..

## கைதான மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ரி.ஐ.டியினரின் விசாரணைக்கு அனுப்பிவைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஞாயிறன்று கைது செய்யப்பட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இருவரும் கொழும்பில் உள்ள பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு (ரிஐடி) அலுவலகத்திற்கு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை தர்மபுரம் பகுதியில் ஜெயக்குமாரி என்ற தாயாரும், அவருடைய 14 வயதுடைய மகளும் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்ட சம்பவத்தின் தொடர்ச்சியாகவே மனித உரிமைச் செயற்பாட்டாளர்களாகிய ருக்கி பெர்னாண்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது.

கொழும்பைத் தளமாகக் கொண்டு செயற்படுகின்ற மனித உரிமைகள் ஆவண மையத்தின் ஆலோசகராகிய பெர்னாண்டோ, யாழ்ப்பாணத்தில் இருந்து இயங்கும் அமைதிக்கும் நல்லிணக்கத்திற்குமான அமைப்பின் பணிப்பாளராகிய அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகிய இருவரும் பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் ஆவர்.

20 ஆம் பக்கம் பார்க்க..

## அமலனின் உடல் நேற்று பொலிஸ் பாதுகாப்புடன் நல்லடக்கம்





(யாழ்ப்பாணம்)

பொன்னணிகளின் போரில் அடித்துப் படுகொலை செய்யப்பட்ட யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் அமலனின் உடல் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்றைய தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அமலனின் இறுதிக்கிரியையில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டி

20 ஆம் பக்கம் பார்க்க..

## மீனவர்கள் 140 பேர் நாடு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சிறைச்சாலைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 140 பேர் இந்திய கடற்படை அதிகாரிகளிடம் நேற்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் ஒப்படைக்கப்பட்டனர். சர்வதேச கடல் எல்லையில் வைத்து இந்திய கடற்படையினரிடம் இந்த மீனவர்கள் ஒப்படைக்கப்பட்டனர் என்று இலங்கை

20 ஆம் பக்கம் பார்க்க..

## ஜெயக்குமாரி, விபூசிகாவை விடுவிக்கக் கோரி போராட்டம்

### இரு இடங்களில் த.தே.கூட்டமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் போர்க்காலத்தில் காணாமற்போனவர்களை தேடி அலையும் குடும்பங்களின் போராட்டத்தை முடக்கும் நோக்குடன் அரசாங்கத்தினால் திட்டமிட்டு கைதுசெய்யப்பட்டு பூஸா முகாமில் தடுப்புகாவலில் வைக்கப்பட்டுள்ள பாலேந்திரன் ஜெயக்குமாரி மற்றும் அவரது மகளான விபூசிகா ஆகியோரை உடனடியாக விடுதலை செய்யக்கோரியும், கைது நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்தும் இன்று யாழ்ப்பாணத்தில் இரண்டு இடங்களின் மாபெரும் கண்டனப் போராட்டம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

இதில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வட்க்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், மற்றும் வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் உட்பட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களும் பங்கு பற்றவுள்ளனர்

20 ஆம் பக்கம் பார்க்க..

## ஜெனிவா மாநாட்டிற்கு எதிராக மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டம்

ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டிற்கு எதிராக மன்னாரில் நேற்று திங்கட்கிழமை காலை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காக பேசாலை முருகன் கோவில் சன்னார், கூறாய் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களையே சிவில் உடை தரித்த படைத்தரப்பினர் பேருந்துகளில் மன்னாருக்கு அழைத்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்திய வீட்டுத்திட்டத்தை பெற்று தருவதாகவும் இடம் பெறவுள்ள நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்ளுமாறு கோரியே தம்மை அழைத்து வந்ததாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் வந்த போதே தம்மை ஆர்ப்பாட்டத்திற்கு அழைத்து வந்த விடயம் அவர்களுக்கு தெரிய வந்துள்ளது. இந்த நிலையில் அதிகளவான தமிழ் மக்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளாது திரும்பிச்சென்று விட்டனர்.

இலங்கை அரசிற்கு ஆதரவு தெரிவித்தும், ஜெனிவா மனித

20 ஆம் பக்கம் பார்க்க..

## சிறுவர் இல்லத்தில் விபூசிகா ஒப்படைப்பு

(தர்மபுரம்)

தர்மபுரம் முசிலம்பட்டி பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து ஜெயக்குமாரியும் அவரது மகள் விபூசிகாவும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதனை தொடர்ந்து தாய் ஜெயக்குமாரி பூசா முகாமிற்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் நேற்றைய தினம் மகள் விபூசிகா கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்லத்திற்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் கிளிநொச்சி

20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆசிரிய சகோதரனின் படுகொலைக்கு நீதி கேட்டு 21 ஆம் திகதி போராட்டம்

## கஜதீபன் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய சகோதரனின் படுகொலைக்கு நீதி கேட்க அனைவரும் ஒன்றிணைவோம் என ஆசிரியரும் வடக்கு மாகாணசபையின் ஆளும்கட்சி உறுப்பினருமான பாலச்சந்திரன் கஜதீபன் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

வவுனியாவில் விஞ்ஞான பாட ஆசிரியராகக் கல்வி கற்பித்த எமது ஆசிரிய சகோதரனான கா.நிருபன், கடந்த ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத்தேர்தலின் போது தனது ஜனநாயக உரிமையான வாக்களிப்பினை நிகழ்த்துவதற்காக கடந்த 19.09.2013 அன்று யாழ்ப்பாணம் வந்தபோது காணாமற் போயிருந்ததாகச் சொல்லப்பட்டது.

ஆனால் கடந்த 12.03.2014 புதன்கிழமையன்று ஏ-9 வீதியில் மாங்குளம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் இவருடையதென அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இன்றைய சூழலில் வடகிழக்கு தாயகப்பகுதியில் நடக்கும் ஒவ்வொரு நகர்வுகளையும் இறுக்கமாகக் கண்காணிக்கும் அரசாங்கமானது, தனக்குத்தெரியாமல் இப்படியொரு சம்பவம் இடம்பெற்றுள்ளதென எவ்விதத்திலும் தட்டிக்கழிக்க முடியாது.

வடக்கில் செறிவான இராணுவப்பிரசன்னம் நிலவி வரும் சூழ்நிலையில் தன் ஆளுகைக்குள் இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் அரசாங்கமோ, சட்டம் ஒழுங்கைப்பேணும் தரப்பினரோ தனக்குள்ள பொறுப்பினை இலகுவில் மறுக்க முடியாது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் பொறுப்புக்கூறும் கடப்பாடு நிச்சயம் உள்ளது.

இச்சம்பவத்தை வெறும் ஓர் ஆசிரியர் சம்பந்தப்பட்டதாகவோ, அல்லது ஆசிரியர் சமூகம் மட்டும் சம்பந்தப்பட்டதாகவோ பார்க்கமுடியாது.

மாறாக இந்த மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொரு தமிழ் மகனும் எவ்வாறான , உரிமைகள் மறுக்கப்பட்ட, பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டு இருக்கிறான் என்பதை துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறான சூழ்நிலையில்தான் ஆசிரிய நண்பனின் அப்பட்டமான படுகொலை இடம்பெற்றிருக்கிறது.

நண்பனின் படுகொலைக்கு நீதிகேட்டு ஆசிரிய சமூகத்தினர், மாணவர்கள் மட்டுமல்ல அனைத்துத்தரப்பு பொது மக்களும் கட்சிகள், சங்கங்கள், அமைப்புகள் என்ற வேறுபாடுகளைக்களைந்து ஒன்றுபட்டு போராட முன்வர வேண்டும். சக ஆசிரிய நண்பனின் படுகொலைக்கு நீதிவேண்டி இலங்கை ஆசிரிய சங்கத்தினால் எதிர்வரும் 21 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்டனப்போராட்டத்தில் கலந்து கொண்டு படுகொலைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என ஒரு ஆசிரியனாக வேண்டிக கேட்டுக்கொள்கின்றேன் என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)


## தவறிவிட்டது

மருதப்பு யோகநாதன் என்பவரின் சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் காப்புறுதிப் பத்திரம், வாகன அனுமதிப் பத்திரம் தருமபுரம் என்ற இடத்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தருமபுரம் மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள ப.நோ.கூ. சங்கத்தில் ஒப்படைக்கவும்.

தொடர்புகளுக்கு:

0770411822 (5841)

## வேலைவாய்ப்பு

உங்களுக்கு தனியார் துறைமுகம் விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமாயின் 18-45 வயதை உடையவராயின் கப்பல் புனர்நிர்மாணப்பிரிவில் சாதாரண ஊழியர்கள் வெல்டர், தச்சு, விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர், கேட்டரிங் லொன்றி சம்பளம் 18000 /- 35000/- உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில்.

தொடர்பு :-077 431 2176, 077 556 1883


## கண்ணீர் அஞ்சலி

அமரர் திருமதி

புவனேஸ்வரி திருஞானசம்பந்தர்



எமது பாடசாலையின் ஆசிரியை செல்வி தி.தயாநிதி அவர்களின் அன்புத் தாயார் திருமதி புவனேஸ்வரி திருஞானசம்பந்தர் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(5839)


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6767)


## உள்ளக விசாரணை நடத்தப்படும் - டலஸ்

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக உள்ளக விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் அழகப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு பிரச்சினைக்கு பல தீர்வுகள் கிடைக்கக கூடும். மேற்குலக நாடுகள் முன்வைக்கும் தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் முறைமையொன்று இங்கு இல்லை. பொருத்தமான முறையொன்றை நடைமுறைப்படுத்தி இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று அமைச்சர அழகப்பெரும மேலும் கூறினார். (செ-11)

## ஜெனிவாவுக்கு எதிராக கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

ஜெனிவாவிவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து 10 இலட்சம் கையெழுத்துக்களைத் திரட்டும் நடவடிக்கையொன்று கொழும்பில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் சக்தி எழுச்சி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கையெழுத்து வேட்டை நிகழ்வு, மொறட்டுவை நகரசபை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

தபால்துறை அமைச்சர் ஜீவன குமாரதுங்க, மொறட்டுவை நகரசபை மேயர் லால் பெர்ணான்டோ, நகரசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இந்த கையெழுத்து வேட்டையில் பங்குபற்றினர். (செ-11)


## நிரந்தர வேலைவாய்ப்பு

தொழில் அடிப்படையில் சம்பளம் 18000/-+38000/- கொழும்பை அண்மித்த ஜேம்/டொபி/பிஸ்கட்/தேங்காய் பால்மா/இறைச்சி/Puc/Paint/கிளவுஸ் மற்றும் பல தொழிற்சாலைக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. (உற்பத்தி, லேபல், பொதியிடல், களஞ்சியப் பிரிவு) உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் நண்பர்கள் குழுக்களாக ஒரே தொழிற்சாலைகளில் (தமிழ்,முஸ்லிம் மக்களுக்கு விசேடம்) வருகை அன்றே தொழிலுக்கு செல்லலாம்.

தொடர்பு :- 077 683 8231 (C-6770)


## அகவை 60-ல் வாழ்த்துகின்றோம்



### திரு. செல்வத்துரை தியாகராஜா

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக நீண்டகாலம் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெறும்


திரு.செல்வத்துரை தியாகராஜா அவர்களை அகவை 60-ல் வாழ்த்துவதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்வி அபிவிருத்திப் பிரிவினர்

வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(5842)

## மரண அறிவித்தல்



### அருளானந்தம் திரேசம்மா

சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் திரேசம்மா 15.03.2014 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சலமோன் – மரியம்மா ஆகியோரின் அன்பு மகளும், பிலிப் அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், அனற் அமுதா (பிரான்ஸ்), ஜொணாலி றொபின் (பிரான்ஸ்), அருட் தந்தை யாவிஸ் (இயக்குநர் – கரித்தாஸ் கியூடெக் – கிளிநொச்சி), அனற்ஷீபா (பிரான்ஸ்), ஜஸ்ரின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வின்சன் (பிரான்ஸ்), ரஞ்சினி (பிரான்ஸ்), உதயன் (பிரான்ஸ்), கோமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், விக்ரோறியா டெய்சி, அல்பிறட், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செ.போல் பிரதீப் ஆகியோரின் பெரியம்மாவும், ஹெபின், ஹொலின், ஹொட்வின், ஜசிக்கா, கிறிஸ்ரினா, கிறிஸ்ரியன், கிறிஸ்ஷாந், அன்ரனி, ஜெறமி, ஷெபானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 19.03.2014 புதன்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
அருட்தந்தை யாவிஸ் (மகன்)
இயக்குநர் கரித்தாஸ்
கியூடெக் (கிளிநொச்சி)
கிளி/முல்லை மறைக்கோட்ட முதல்வர்

சுண்டுக்குளி

(5845)


விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கண்ணனைப் பாடிய இஸ்லாமியக் கவிஞர்கள்

கண்ணனின் அன்புமயமான லீலைகளைப் புகழ்ந்து பாடாத கவிஞர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

இந்து சமயக் கவிஞர்கள் கண்ணனைப் பாடிப் புகழ்வதில் வியப்பு ஏதும் இல்லை. ஆனால் பிற மதத்தினர் குறிப்பாக இஸ்லாமிய சமயக் கவிஞர்கள் சிலரும் ஸ்ரீகிருஷ்ணரின் லீலைகளைப் பாடி சமயச் சமரசம் கண்டவர்களாக விளங்கினர்.

மொகலாய மன்னர்கள் காலத்தில் அத்தகைய பலர் இருந்துள்ளனர். குறிப்பாக அக்பரின் அவையில் இருந்த அப்துல் ரஹீம் கான்கானா அவர்களின் சிறந்தவராக கருதப்படுகிறார். அவர் தனது 11 ஆவது வயதிலே கவிதை படைக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். அதுவும் எந்தக் குருவின் உதவியும் இல்லாமலேயே இயல்பாகவே கவிதை புனையும் ஆற்றலை அவர் பெற்றிருந்தது தான் வியப்புக்குரியது.

அக்பரின் அவைப்புலவர் 'கவி ரத்தினம்' அப்துல் ரஹீம் கான் கானா, கிருஷ்ணரின் மயக்கும் வடிவை வியந்து வர்ணிக்கிறார். "கிருஷ்ணருடைய ரூப லாவண்யமும், புல்லாங்குழலின் மோகன இசையும் கோபியரின் உள்ளம் முழுவதையும் ஆக்கிரமித்து விடுகின்றன" என்கிறார் அப்துல் ரஹீம்.

"தர்மசாலை நிரம்பி விட்டதை கண்டு எப்படி வழிப்போக்கர்கள் திரும்பி விடுகிறார்களோ அதுபோலவே கிருஷ்ணரின் தெய்வீக உருவம், கோபியரின் மன ஆலயங்களில் வேறு எவருக்குமே இடம் இல்லாமல் நிறைந்து விட்டது" என்கிறார் ரஹீம்.

கிருஷ்ணரின் காலடி ஓசை கேட்கிறது. அவ்வோசையை நாயகி கேட்டு விட்டாள். உடனே அவள் திடுக்கிட்டு நாணம் கொண்டாள். பிறகு அங்கிருந்து ஓடத் தொடங்கினாள். அதற்குள் ஸ்ரீகிருஷ்ணர் சட்டென்று பாய்ந்து அவளது நீண்ட கூந்தலைப் பற்றி விடுகிறார். இந்தக் காட்சியை வர்ணிக்கும் ஸாஹ் அக்பர் எனும் இஸ்லாமியக் கவிஞர் "செண்பக மலர் வில் எடுத்துக் காமதேவன் ஸர்ப்ப வடிவபாணத்தை எய்வதுபோல் இருந்தது" என்கிறார். என்ன ஓர் அற்புதமான உவமை இது!

ரஸ்கான் ஒரு பக்தி யுகக் கவிஞர். கிருஷ்ணரின் பால லீலைகளை தமது கவிதைகளில் மிக அழகாக அவர் வர்ணித்துள்ளார். புழுதி படிந்த வீட்டு முற்றத்தில் பாலகிருஷ்ணன் ஆடி அசைந்து தளிர்நடை போட்டு இங்கும் அங்கும் அலைந்து திரிந்து விளையாடுகிறான். பாதி வாயிலும் பாதி கையிலுமாக வெண்ணெய். கால் தண்டை ஜல்ஜல் என்று ஒலிக்கின்றது. மஞ்சள் நிற ஆடை மயில் இறகுக் கிரீடம்... அப்போது எங்கிருந்தோ வந்த ஒரு காகம், கிருஷ்ணரின் கையிலிருந்த வெண்ணெயைப் பறித்துச் செல்கிறது. அந்தக் காட்சியை ரஸ்கான் "ஆகா அந்தக் காகம் எத்தனை பாக்கியசாலி! அது எத்தனை புண்ணியம் செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படி கிருஷ்ணரின் கையில் இருந்த வெண்ணெயைப் பறித்துச் செல்லும் பாக்கியம் அதற்குக் கிடைத்திருக்குமா?" என்று வியக்கிறார்.

மாலிக் முகமது ஜயசி என்று ஓர் இஸ்லாமியக் கவிஞர். அவரும் தனது பல கவிதைகளில் பல்வேறு இடங்களில் பல விதங்களில் கிருஷ்ணரைப் பற்றி வர்ணிக்கிறார். உலகமறிந்த கபீர்தாசரும் அப்படியே!

கபீர் கூறும்போது "கிருஷ்ணமயமான ஆனந்த நீரைப் பருகினால் பருக பருக இன்னும் வேண்டும். இன்னும் வேண்டும். என்ற தாகம் தான் அதிமாகிறதே தவிர தாகம் குறையவில்லையே..." என்று அங்கலாய்க்கிறார்.

மேலும் கபீர் "கிருஷ்ணர் ஒரு சமுத்திரம்! அதில் நான் ஒரு சிறு மீன். நீரை விட்டு வெளியேறினால் எனக்கு வாழ்வு ஏது?" என்கிறார். அதேபோல் "பகவான் கூடு என்றால் நான் அதில் அடைபட்டிருக்கும் கிளி. அவர் மரம், நான் அதன் நிழலில் அடைக்கலம் ஆகியுள்ள பறவை". என்று இன்னும் பலவாறு கிருஷ்ணரை வர்ணிக்கிறார்.

இப்படி கிருஷ்ண பக்தியில் திளைத்த இஸ்லாம் கவிஞர்கள் பலர் உண்டு. அவர்கள் வடித்த கிருஷ்ண பக்தி இலக்கியங்கள் நம் நாட்டின் மத அமைதிக்கும், நல்லிணக்கத்துக்கும் பெரிதும் துணை நிற்கின்றன. மேலும் இந்து-இஸ்லாம் ஒருமைப்பாட்டுக்கு அந்தக் கவிஞர்கள் உறுதியான இணைப்புக் கயிறாக விளங்கியுள்ளனர் என்றால் அது மிகையல்ல.

எனவே, கிருஷ்ண ஜெயந்தி சமயத்தில், நாம் பகவான் ஸ்ரீகிருஷ்ணரை வணங்கினால் மட்டும் போதாது, அந்தக் கிருஷ்ண பக்தியில் திளைத்த இஸ்லாமியக் கவிஞர்களின் பெரும் தொண்டினை எண்ணிப் பார்த்து நன்றியில் திளைக்கவும் வேண்டும்.

மனித நேயம் இல்லாத பக்தியினால் பயனில்லை. மனித நேயத்தோடு இணைந்ததாக பக்தி இருக்கவேண்டும்.

கிருஷ்ண ஜெயந்தி நாளன்று, ஓர் அம்மா தனது வீட்டில் கிருஷ்ணரின் பாதங்களைக் கோலமாகப் போட்டுக் கொண்டிருந்தார். கோலத்துக்கு அருகில் அவளது சிறுபிள்ளை தளிர் நடை நடந்து வந்தது. "கோலத்தை அழித்துவிடாதே, சனியனே" என்று குழந்தையைத் தள்ளி விட்டாள் அவள். குழந்தை அழதது. இத்தனைக்கும் அந்தக் குழந்தையின் பெயரும் பாலகிருஷ்ணன் தான்.

அறியாத குழந்தையை அடிக்கின்ற வீட்டுக்கு கண்ணன் வருவானோ?

*இளசை சுந்தரம்*

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண விசாரணைகள்

## 20 ஆம் திகதி ஆரம்பம்

காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் கிழக்கு மாகாணத்துக்கென நடைபெறும் விசாரணைகளின் முதலாவது அமர்வு ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 22ஆம்திகதி வரையில் நடைபெறும் இவ் அமர்வில், கோரளைப்பற்று வடக்கு- வாகரை, கோரளைப்பற்று தெற்கு - கிரான் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான விசாரணைகள் கிரானிலுள்ள றெஜி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மறுநாள் ஏறாவூர் பற்று - செங்கலடி பிரதேச செயலகப்பிரிவுக்கான விசாரணைகள் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

மேலும் 22ஆம்திகதி மண்முனை வடக்கு - மட்டக்களப்பு பிரதேச செயலகப்பிரிவுக்கான விசாரணைகள் மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் கிழக்கு மாகாணத்திற்கான அமர்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அசாதாரணச்சூழல் காரணமாக கடந்த 1990 முதல் 2009ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னெடுத்து வருகிறது.

அந்த வகையில், எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, கிரான், செங்கலடி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் பொதுமக்களுடன் நேரடியாக உரையாடி முறைப்பாடுகள் பெறப்படவுள்ளது.

விசாரணையின் ஆரம்பக்கட்டமாக கடந்த 3ஆம் திகதி கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த ஆணைக்குழுவினர் மாவட்ட செயலாளர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

எதிரவரும் ஒகஸ்ட் மாதம வரையில் மேறகொள்ளவுள்ள இவ்விசாரணைகளை ஜனாதிபதி ஆணைக் குழுவின், தலைவர் மெக்ஸ்வல் பராக்கிரம பரணகமகே, செயலாளர் எச்.டப்ளியூ.குணதாச பிரியந்தி சுரஞ்சனா வித்தியாரத்ன, மனோ ராமநாதன் ஆகியோர் கொண்ட குழு முன்னெடுக்கின்றது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டமைக்கு அமைவாக மாவட்ட ரீதியாக விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதற்கென அவ்வப் பிரதேசங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் முறைப்பாடுகளைப் பெற்றிருந்த அதே வேளை நேரடியாகவும், தபால் மூலமும் பலர் முறைப்பாடுகளைச் செய்திருந்தனர். கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை நேரடியாக விசாரணை செய்யும் நடவடிக்கைகளே தற்போது நடைபெற்றுவருகின்றன. இவை தொடர்பான அறிக்கையை இந்த ஆணைக்குழு ஜனாதிபதியிடம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தின் இறுதியில் சமர்ப்பிக்கும் என்று தலைவர் மெகஸ்வல் பராக்கிரம பரணகமகே தெரிவித்தார்.

மேலும்- ஜனாதிபதியினால் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டு மாவட்ட ரீதியாக விசாரணைகள், முறைப்பாடுகள் பெறப்பட்டு பதிவுகள் மேற் கொளளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 120 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 120 |
| தக்காளி | 30 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 35 | 40 |
| கோவா | 30 | 30 | 40 |
| கரட் | 90 | 70 | 100 |
| பூசணி | 30 | 25 | 40 |
| புடோல் | 40 | 30 | 60 |
| வாழைக்காய் | 30 | 35 | 50 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 55-70 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 100 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 60 |
| பயற்றங்காய் | 60 | 125 | 100 |
| லீக்ஸ் | 40 | 60 | 80 |
| பீற்றூட் | 20 | 25 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 370 | 320 |
| போஞ்சி | 70 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | – |
| கீரை - பிடி | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 40 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 40-45 |
| இராசவள்ளி | 80 | 70 | 80 |

# இராசி பலன்

18.03.2014
(பங்குனி 04, செவ்வாய்க்கிழமை )
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
துதியை பின்னிரவு 12.20 மணிவரை
அத்தம் பிற்பகல் 3.35 மணிவரை
இராகுகாலம் 3.19-4.49 மணிவரை
சுபநேரம் 10.49-12.19 மணிவரை

**மேடம்** தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மாறும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் ஏற்படலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**இடபம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** தொலைபேசித் தகவலால் சந்தோசம் அதிகரிக்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும், பயணங்கள் கைகூடும்.

**கடகம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், கௌரவமான நாள்.

**சிங்கம்** இறை வழிபாட்டால் இன்பங்கள் கூடும் நாள், சான்றோர் சந்திப்புண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும்.

**கன்னி** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், குடும்பத்தினரை அனுசரித்தச் செல்வது நல்லது, பணத்தேவைகள் கடைசி நேரத்தில்தான் பூர்த்தியாகும்.

**துலாம்** புண்ணிய காரிங்களுக்காக செலவு செய்து மகிழ்வீர்கள், கூட்டாளிகளிடம் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை, மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்,விருந்தினர் வருகையுண்டு,சகோதர ஒற்றுமை பலப்படும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**தனுசு** பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தொழில் ரீதியாக புதிய் திட்டங்கள் வகுப்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்** ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் இனி மனம் மாறுவர், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது, வரவேண்டிய வரவுகள் வருவதில் தாமதங்கள் ஏற்படலாம், விரயங்கள் கூடும், போசன சுகமுண்டு.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்கள் வருகையுண்டு, விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், வருமானம் திருப்தி தரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எங்கள் இல்லம்' கட்டட பாகங்கள் சூறையாடல்

## கட்டடத்திற்கு பொலிவூட்ட நடவடிக்கை எடுங்கள்

வடம ராட்சி திக்கம் பகுதியில் சேவாலங்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் சில வருடங் களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட **எங்கள் இல்லம்** தற்பொழுது பராமரிக்க எவருமில் லாமல் கட்டடங்களின் பாகங்கள் சூறையாடப் படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித் துள்ளனர்.

திக்கம் பகுதியில் கடந்த 2007 அம் ஆண்டு சுனாமியாலும் யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட மககளுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவத ற்கு சிறு கைத்தொழில் நிலையமாகவும் பாடசாலை மாணவர்களுக்கு கணனி மற்றும் கற்கைச் செயற்பாடுகள் என்பன குறித்த இல்லத்தில் இடம்பெ ற்று வந்தன.சுமார் 30 இலட்சம் ரூபா செலவில் நிர்மா ணிக்கப்பட்ட மேற்படி இல்லம் தற்போது பராமரிப்பு அற்ற நிலையில் செயலிழந்து காணப்படுகின்றது.

இவ்வில்லம் இயங்கிய காலத்தில் அப்ப குதி மக்கள் நன்மையடைந்தனர். ஆயினும் தற்போது செயலிழந்தமையால் அப்பகுதி யில் பாதிக்கப்பட்ட மக்கள் பல இன்னல்களை எதிர் நோக்கி வருவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே குறித்த இல்லத்தினை இயங்க வைக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-24)



நன்றி: தமிழ்மிரர்

# எஸ்.டி.சி. நிறுவனத்தினூடாக வழங்கப்பட்ட வீட்டுத் திட்டம் முழுமை பெறவில்லை

## ஆவணங்களுக்கு பதில் கிடைக்காமையே காரணம்-மக்கள் சுட்டிக்காட்டு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் எஸ்.டி.சி. நிறுவனத்தி னூடாக வீட்டுத் திட்டத்தை பெற்ற மக்கள் அனுப்பி வைத்த ஆவணங்களுக்கு பருத்தித் துறை சுகாதார வைத்திய பணிமனையிலி ருந்து பதில் கிடைக்காமையால் வீட்டுத் திட்டம் பூர்த்தியடையவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.மேற்படி பிரதேசத்திலு ள்ள உடுத்துறை, ஆழியவளை, வத்திராயன் ஆகிய மூன்று கிராமங்களிலுள்ள மக்களு க்கு எஸ்.டி.சி. நிறுவனத்தினூடாக நிரந்தர வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் மருதங்கேணி பிரதேச சபை யினூடாக க்ட்டடத்திற்கான விண்ணப்பப்ப டிவ ங்களை மக்கள் பெற்று வீட்டின் படவ ரைபை யும் பிரதேச சபையிலுள்ள அதற்கு பொறுப் பான அதிகாரியின் உதவியுடன் பெற்றுக்கொ ண்டுள்ளனர்.

ஆயினும்வீட்டின்அமைவிடத்தில்மலசலகூடம், கிணறு போன்றவற்றின் அளவீடுகள் மற்றும் சுகாதாரம் தொடர்பான சிபாரிசுகளுக்காக மருதங்கேணி பிரதேச சபையினூடாக பருத்தி த்துறை சுகாதார வைத்திய பணி மனைக்கு ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இவ்வாறாக அனுப்பி வைக்கப்பட்ட 30 ஆவணங்களுக்கான பதில் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை.

ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டு 3 மாதங்கள் கடந்துள்ள போதிலும் குறித்த பணிமனையினர் இது தொடர்பில் அசமந்தப் போக்காக இருப்பதையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் வீட்டுத் திட்டங்களைப் பெற்ற மக்கள் வீட்டை முழுமையாக அமைக்க முடியாமலும் இறுதிக்கட்ட பணத்தைப்பெற முடியாத நிலைக்குட்பட்டுள்ளனர்.

எனவே, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இக்கிராம மக்களின் சூழ்நிலையைக் கருத் திற்கொண்டு வீட்டுத் திட்டம் முழுமையடைய குறித்த பணிமனையினர் ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரி க்கை விடுத்துள்ளனர். (2-9-64)




# கொழும்பு தமிழ் சங்கத்தின் பட்டமளிப்பு விழா

கொழும்பு தமிழ்ச் சங்கத்தினரால் தமிழ் பட்டயக் கற்கை நெறியின் பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு வரவேற்பு ரையை கல்விப் பணிக் குழுச் செயலாளர் மு. மனோகரன், தொடக்கவுரையை கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் ஆ.இரகுபதி பால ஸ்ரீதரன், பட்டமளிப்பு பேருரையை பேராசி ரியர் சி.தில்லைநாதன் ஆகியோர் ஆற்றவு ள்ளனர். தொடர்ந்து பேராசிரியர் செ. யோக ராசா விருதை அறிமுகம் செய்ய *தமிழ் நிதி* எனும் சிறப்பு விருதினை சந்தியாப்பிள்ளை அரியரத்தினம் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

பட்டமளிப்பு விழாவை தொடர்ந்து கொழு ம்பு தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் தம்பு சிவசுப்பிரமணியத்தின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடையவுள்ளது. (2-9)

# யாழ்.மாவட்டத்தில் மிளகாய் செய்கை 600 ஹெக்ரேயர் பரப்பில் பயிர்ச்செய்கை

## இவ்வருடம் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டு

(மானிப்பாய்)

யாழ்.மாவட்டத்தில் மிளகாய் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு விவசாயத் திணைக்க ளத் தினர் 900 ஹெக்ரேயர் என உத்தேசித்துள்ள போதிலும் 600 ஹெக்ரேயர் பரப்பள விலேயே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் இவ்வருடம் மிளகாய்ச் செய்கை யில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

கடந்த காலபோகத்தில் யாழ். மாவட்டத்தின் மிளகாய்ச் செய்கை கணிசமான அளவு வீழ்ச்சி கண்டுள்ளது. இதன்படி 900 ஹெக்ரேயர் உத தேச அளவாக இலக்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 300 ஹெக்ரேயர் அளவில் வீழ்ச்சி கண்டு 600 ஹெக்ரேயர் அளவில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

மிளகாய் பயிர்ச்செய்கை அளவு வீழ்ச்சி கண்டதற்கு உருளைக்கிழங்குப் பயிர்ச்செய் கையில் விவசாயிகளின் ஆர்வம் திரும்பியதும் காலநிலை முரண்பாடுகளுமே காரணம் எனக் கூறப்படுகின்றது.

காலபோக மிளகாய் பயிர்ச்செய்கைகளில் எம்.ஐ.கிறீன், எம்.ஐ.02, கே.ஏ.02 என்பன வற் றோடு உள்ளூர் கலப்பு இனங்களை அன லைதீவு கலப்பு, கைதடிக் கலப்பு, மாதகல் கலப்பு போன்ற இனங்களும் பயிரிடப்பட் டுள்ளன.

தம்புள்ள மத்திய சந்தையில் பச்சை மிளகாய்க்கு நல்ல கிராக்கி இருப்பதால் குடாநாட்டில் விவசாயிகளின் தோட்டங்களுக்கு நேரில் சென்று வியாபாரிகள் போட்டி போட்டு பச்சை மிளகாய் கொள்வனவில் ஈடுபட்டிருப் பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஒரு கிலோ பச்சை மிளகாய் தற்பொழுது 70 ரூபாவில் இருந்து 90 ரூபா வரையில் மொத்த மாகக் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றது.

மிளகாய் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் ஆர்வத்தோடு பச்சைமிளகாயை அறுவடைசெய்து தோட்டத்தில் வைத்தே விற்பனை செய்கின்றனர்.

மிளகாயை பழுமாக்கி காயவைத்து செத்தல் மிளகாயாக விற்பனை செய்வதிலும் பார்க்க காய்மிளகாயாக விற்பனை செய்வதும் சிரமம் இல்லாமல் இருப்பதோடு கணிசமான அளவு இலாபம் ஈட்டக்கூடிய நிலையில் இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக மாவட்ட விவசாயத்திணைக் கள பாடவிதான அலுவலர் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் உத்தேச இலக்கை மிளகாய் பயிர்ச்செய்கை எட்டவில்லை. காலபோகத்தில் கூடிய அளவில் எம்.ஐ.கிறீன் ரக மிளகாய் இனம் பயிரிடப்பட்டுள்ளது. இது நோய் எதிர்ப்பு தன்மை கொண்டது. யாழ்ப்பாணத தில் நல்ல விளைச்சலைக் கொடுக்கின்றது என்றார். (2-9-23)





நீர்வேலி கிராமத்தின் வரலாற்று பெருமைகளையும் கிராமச் சிறப்புக்களையும் உள்ளடக்கி த.பேராசசிங்கத்தினால் எழுதப்பட்ட *புகழ்பூத்த நீர்வேலி* எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் நூலை வெளியிட்டு வைக்க தொழிலதிபர் பொ. கிருஷ்ணானந்தன் பெற்றுக் கொள்வதையும் நூலின் மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆற்றுவதையும் பேராசிரியர் தி. வேல்நம்பி நூலாசிரியரைக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த மன்னார் ஆயர் முயற்சிக்கின்றார்- விமல் வீரவன்ச

(கொழும்பு)

**மன்னார் பேராயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த முயற்சித்து வருவதாக வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

மேற்குலக நாடுகளுடன் இணைந்து கொண்டு அவர் இவ்வாறு நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களப் பெரும் பான்மை மக்களினால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படுவ தாக பேராயர் ஜோசப். சர்வதேச ரீதியாக பிரசாரம் செய்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கில் இடைக் கால நிர்வாக மொன்றை நிறுவ வேண்டு மென பேராயர் சர்வ தேச சமூகத்திற்கு பரிந்துரை செய்து ள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மனிதவுரிமை மீறல்கள் இடம் பெற்று வருவதாகவும் வடக்கின் அனைத்து பெண்களையும் படையினர் பாலியல் ரீதியாக துன்புறுத்துவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் யுத்தம் செய்து பெற்றுக் கொள்ள முடியாத வற்றை ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊடாக பேராயர் ஜோசப் பெற்றுக் கொள்ள முயற்சிக் கின்றார் என விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார். (2)

## முதலாம் பருவகால கல்வி நடவடிக்கை

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தினரால் இவ்வாண்டுக்கான பகுதி நேர மாணவர்களின் முதலாம் பருவகால கல்வி நடவடிக்கைகள் இம்மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

எனவே, பதிவினை மேற்கொண்ட பகுதிநேர மாணவர்கள் அனைவரையும் வகுப்புகளுக்கு சமுகமளிக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு www.atijaf.com என்ற இணையத்தள முகவரியை பார்வையிடுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-9)


ST JOHN AMBULANCE

## சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு

சென்ஜோன் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆண், பெண் இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். நாள் ஒன்றிற்கு ஆண் பராமரிப்பாளர் ஒருவருக்கு 1200/- வழங்கப்படும்.

இச் சேவையில் சேர விரும்புவோர் எதிர்வரும் 23.03.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

**மேலதிக விபரங்களுக்கு:**
**24 மணிநேர அம்புலன்ஸ் சேவைக்கான**
**இலக்கம்: 021 3214444**

**மாவட்ட ஆணையாளர்,**
**சென்ஜோன் அம்புலன்ஸ்,**
**யாழ். மாவட்டம்.**

(5836)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

# பதவி வெற்றிடம்

- உதவி ஆசிரியர்
- அலுவலகச் செய்தியாளர் (உள்ளகம், வெளியகம்)

## உதவி ஆசிரியர்

**தகைமை :-** 35 தொடக்கம் 55 வயது வரையான இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்

**கல்வி :-**க.பொ.த. உயர் தரத்தில் சித்தி

ஊடகத்துறை அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் கல்வித் தகைமை கவனத்தில் கொள்ளப் படமாட்டாது.

## அலுவலகச் செய்தியாளர்

**தகைமை :-** 28 தொடக்கம் 50 வயது வரையான இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

**கல்வி :-** க.பொ.த.உயர்தரத்தில் சித்தி

**குறிப்பு**

i. யாழ்.நகரை அண்மித்த தூரங்களில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ii. எட்டிய தூரத்தில் இருப்பவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

மேற்குறித்த தகைமைகளும் ஆர்வமும் உடையவர்கள் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் 20.03.2014 (வியாழக் கிழமை) காலை 4 மணிக்கு வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

**பொது முகாமையாளர்**
**வலம்புரி**
**இல.3,2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

இ



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### VACANCIES

Applications will be received by me up to 11th April 2014 from suitably qualified candidates for the following posts;

**1. POST - TECHNICAL OFFICER GRADE.II SEG.A**
(Vacancies exist at the Department of Physics and Computer Unit)

**Qualifications:**

National Diploma in Technology in the relevant field of specialization or its equivalent qualifications

Salary Scale : U-MT1(II) Rs.18,360-7x185;9x245-21,860 p.m
Selection : By Practical Test and Interview

**2. AUDIO VISUAL TECHNICAL OFFICER GRADE.II**

**Qualifications:**

a. Diploma in Technology of the Open University or Special Engineering Apprenticeship Certificate issued from 1975 or National Diploma for Engineering Technicians issued from 1989 by the national Apprentice Board or National Diploma in Technology or City Guilds Final Certificate in the fields of Electronics of Power, together with one year's experience in relevant video work.
-OR-
b. Diploma in Educational Technology or Diploma in Audio Visual Techniques of a recognized polytechnic or University provided that the courses for the Diploma in Educational Technology or the Diploma in Audio Visual Techniques are of two years duration, with 01 year experience in relevant video work.
-OR-
c. Pass 03 subjects at the G.C.E(A/L) Examination in Science one sitting and six years experience in Audio Visual work.

Salary Scale : U-MN4(II) Rs.22,240-20x320;1x465-29105 p.m
Selection : By Interview

**Age Limit for the above Posts** : Not more than 45 years
(*Note - Age limit is not applicable for applicants in the Government Departments/ State Corporation and statutory bodies.)

**Statutory Benefits:**
1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtained from the Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of " **Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna**" together with a self- addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 11.04.2014.**

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service/ Corporations / Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/Corporations/Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment if the applications routed through the Head of Department is not received.

Registrar
14.03.2014

(சி-6769)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவிஸ் எழுவை அமைப்பின் நிதியுதவியுடன் கிளிநொச்சி பரந்தனில் அமைந்துள்ள விழிப்புலனற்றோர் சங்கத்தில் விழிப்புலனற்றோர்களுக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது...

# தமிழ்மா மன்றம் நடத்தும் முதலாவது இயல் விழா

(வவுனியா)

இளம்கலை இலக்கிய ஆர்வலர்களின் ஒன்றிணைவில் கடந்த வருட நடுப்பகுதியில் உருவாக்கப்பட்டு, வவுனியா மாவட்டத்தில் கலை இலக்கய ரீதியிலான தொடர்ச்சியான பணிகளை சிறப்பாக செய்து வருகின்ற, தமிழ் மாமன்றம் தனது முதலாவது பொது விழாவின் இயல் விழாவை இம் மாதம 30 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை, வவுனியா கலாசார மண்டபத்தில் நடத்தவுள்ளது.

தமிழ்மா மன்றம் நடத்தும் இயல் விழாவில், அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஸ்தாபகர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் சிறப்பு விருந்தினராக பங்கேற்கவுள்ளார்.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை காலை அமர்வும், மாலை 4 மணி தொடக்கம் இரவு 8.30 மணி வரை மாலை அமர்வும் இடம்பெறவுள்ளது.

காலை அமர்வில் பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் விவாத அரங்கும், தமிழமா மன்ற உறுப்பினர்கள் பங்குபெறும், சுழலும் சொற்போரும் இடம்பெறவுள்ளது. விவாத அரங்கை தமிழ் ஆசிரியர் என்.கே.கஜரூபனும் சுழலும் சொற்போரினை, கலாநிதி ஶ்ரீ.பிரசாந்தனும் தலைமை தாங்கி சிறப்பிக்கவுள்ளனர்.

மாலை அமர்வில், கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில், சிறப்பு பேச்சாளர்கள் பங்குபற்றும் பட்டிமன்றமும், தமிழ்மா மன்ற உறுப்பினர்கள் பங்குபற்றும் கவியரங்கும் இடம்பெறவுள்ளது.

குறைந்து செல்லும் தமிழார்வத்தை, மீண்டும் துலங்க வைத்து, வவுனியா மாவட்டத்தினுடைய, கலை இலக்கிய இரசனையையும், இளம் சமுதாயத்தினுடைய கலை இலக்கிய ஆர்வத்தையும் பெரிதும் உயர்த்திச் செல்ல, இவ் விழா அமையுவுள்ளது.

எனவே, கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பித்து, பயன் பெறுமாறு, தமிழ்மா மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (2-9-23)

## விளையாட்டு கட்டடம்; புனரமைக்க நிதியுதவி


(பூந்தோட்டம்)

வவுனியா கோவில்புதுக்குளம் றொக்கட் விளையாட்டு கழகத்திற்கு கட்டட புனரமைப்பிற்கான நிதியுதவியினை கோயில்குளம், இளைஞர் கழக ஸ்தாபகர் க.சந்திரகுலசிங்கம் வழங்கியுள்ளார்.

அத்தோடு சித்திரை புத்தாண்டை முன்னிட்டு, றொக்கட் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்படவுள்ள வன்னி கலைஞர்களின் இன்னிசை இரவு மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுக்கான விளம்பர பதாகைகளையும் கோவில்குளம், இளைஞர் கழகத்தின் பின்லாந்து கிளையினரால் வழங்கப்பட்ட ஒரு தொகை பணத்தினையும் அவர் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9-266)

# வவுனிக்குளம் சாளம்பன் எட்டாம் வாய்க்கால் நீரை பெறமுடியாத நிலையில் விவசாயிகள்

## நீரை இலகுவாகப்பெற வழி ஏற்படுத்துங்கள்



(குருமன்காடு)

வவுனிக்குளம் சாளம்பன் எட்டாம் வாய்க்கால் பாவிக்க முடியாத நிலையிலுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

துணுக்காய் பிரதேச வலயத்திற்குட்பட்ட வவுனிக்குளம் சாளம்பன் பகுயிலேயே 8 ஆம் வாய்க்கால் அமைந்துள்ளது.

இவ்வாய்க்காலினை நம்பி 25 ஏக்கர் வயல் நிலங்களில் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் எட்டாம் வாய்க்காலை 500 மீற்றர் தூரம் முன்னோக்கி வெட்டினால் நிலங்களுக்கு தண்ணீரை இலகுவாக பாய்ச்ச முடியுமென விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறாக வாய்க்காலை முன்னோக்கி வெட்டுவதற்கு உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துமாறு சாளம்பன் பகுதி மக்கள் குறைகேள் சந்திப்பின் போது வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரனிடம் எடுத்துரைத்துள்ளனர்.

அத்தோடு குறித்த வாய்க்கால் சீர்செய்யப்படாத பட்சத்தில் வயல் நிலங்களுக்கு நீரைப் பாய்ச்சுவதில் பல்வேறு இடர்பாடுகளை சந்திப்பதாகவும் தமது விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் விவசாயிகள் கவலைகள் வெளியிட்டுள்ளனர்.

எனவே, இதனை மாற்றியமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இலகுவாக விவசாயச் செய்கையை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-250)





## க.பொ.த(சா/த) மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் அனுசரணையுடன் விஞ்ஞான வள நிலையத்தினரால் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கணிதம் மற்றும் விஞ்ஞான பாடநெறிகளுக்கான விசேட கருத்தரங்கு நேற்று முதல் ஆரம்ப மாகி நாளை புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

கிளி/முழங்காவில் மகா வித்தியாலயத்தில் 3 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் கருத்தரங்கில் கிளி/ஜெயபுரம் ம.வி, கிளி/நாச்சிக் குடா முஸ்லிம் வித்தியாலயம், கிளி/ இரணைதீவு றோ.க.வித்தியாலயம், கிளி/முழங்காவில் ம.வி. ஆகிய பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர். (2-9-254)

# கல்மடு கிராமத்தில் சோளச் செய்கை வீழ்ச்சி

## கடனை மீளச் செலுத்த முடியாமல் மக்கள் திண்டாட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கல்மடுகிராம மக்கள் சோளச் செய்கைக்காக பெற்றுக் கொண்ட கடனுதவியை மீள் செலுத்த முடியாத நிலைக்குட்பட்டுள்ளனர்.

கல்மடு கிராமத்திலுள்ள விவசாயிகள் மத்தியில் சோளச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கோடு மீள் எழுச்சி திட்டத்தினூடாக கிராம சமூக வலுவூட்டாளர்கள் கடந்த 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கடனுதவிகளை வழங்கியுள்ளன.

இதன்படி இக்கிராமத்திலுள்ள விவசாயிகள் கடனுதவியாக 15 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்டனர்.

அத்தோடு சோளம் பயிரிடுவதற்காக விதை மற்றும் நிலம் பதப்படுத்தல் என்பனவற்றையும் கிராம சமூக வலுவூட்டாளர்கள் விவசாயிகளுக்கு வழங்கி வைத்துள்ளனர்.

அத்தோடு இக்கடன் திட்டத்தினூடாக செய்யப்படும் சோளச்செய்கை பாதிப்படைந்தால் காப்புறுதியினூடாக இழப்பீடு வழங்கப்படுமெனவும் சோளச்செய்கை பயனுள்ளதாக அமைந்தால் இத்திட்டத்தினரே அவற்றைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவார்கள் எனவும் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், [illegible] சோளம் வரட்சியினாலும் கால்நடைகளினாலும் சேதமடைந்துள்ளது.

இதில் எஞ்சிய சோளத்தினையும் மீள் எழுச்சித் திட்டத்தினர் கொள்வனவு செய்து சந்தைப் படுத்தவுமில்லை. இதனால் கல்மடு விவசாயிகள் சோளச் செய்கையில் பாரிய நட்டத்தை எதிர்நோக்கி யுள்ளனர்.

அதற்கான இழப்பீட்டுத் தொகையினையும் வழங்காது தற்போது கடனை மீள் செலுத்துமாறு நிர்ப்பந்திப்பதனால் விவசாயிகள் செய்வதறியாது திண்டாடுகின்றனர்.

எனவே தமக்கு ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகை [illegible] குறித்த கடனை மீள் செலுத்த [illegible] வழங்குமாறும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-263)

## வசந்தபுரம் பிரதேசம் மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பம்

(கண்டாவளை)


தர்மபுரம் பிரதேசத்திற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி தர்மபுரம் முதலாம் யூனிற் முதல் 13 ஆம் யூனிற் வரையான வீதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட வேலைகளாக வீதிகளிலுள்ள மரங்கள் வெட்டப்பட்டு மின்னிணைப்புக்கள் இணைக்கப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இக்கிராமத்திற்கு தற்போது மின்சாரம் வழங்கப்படுவதனூடாக 800 குடும்பங்கள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருநெல்வேலி நாவலடி லேனும் பாடசாலை லேனும் சந்திக்கும் சந்தியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை படத்தில் காண்கின்றீர்கள். சுமார் 100 அடி தூரம் வரை கொட்டப்பட்டுள்ள இக் குப்பையில் இறந்த ஆடு, மாடுகளின் கழிவுகளும் காணப்படுகின்றன. வீடுகள் அதிகமாகவுள்ள இப்பகுதியில் குப்பைகள் போடுவதை தடுக்குமாறு பொதுமக்கள் நல்லூர் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாட்டைக் கட்டியெழுப்பும் அபிவிருத்தி பயணத்தை எவரும் சீர்குலைக்க முடியாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

**யுத்த நிறுத்த உடன்படிக்கையை மேற்கொண்டு நாட்டைத் துண்டாடச் செய்தது போன்றதொரு வெளிநாட்டுக் கொள்கை எமக்குத் தேவையில்லை. எத்தகைய சூழ்ச்சிகளை எதிர் நோக்க நேரிடினும் நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக் கையையோ அபிவிருத்திப் பயணத்தையோ எவரும் சீர்குலைக்க ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்,**

வங்குரோத்து நிலையில் மக்கள் ஆதரவின்றி உள்ளவர்களே எம்மீதான குற்றச்சாட்டுக்காக 28 ஆம் திகதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

சீனாவின் நிதியுதவியுடன் 180 மில்லியன் அமெரிக்கன் டொலர் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள காலி, மாத்தறை அதிவேக நெடுஞ்சாலையை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து மாத்தறையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

இந்த நாட்டின் அரசியல் நிகழ்ச்சி நிரலில் போடுவதற்கு இப்போது அபிவிருத்தி மீதியிருக்கவில்லை. அனைத்து அபிவிருத்திகளையும் நாம் செய்து முடித்துவிட்டோம். எதிர்க் கட்சிகளுக்கு இந்த நாட்டின் அபிவிருத்தி தொடர்பான யோசனைகளை முன்வைப்ப தற்கும் எதுவும் நாம் மீதம் வைக்கவில்லை. அத்தனையையும் நாம் நிறைவேற்றியுள்ளோம்.

இத்தகைய திட்டங்களால் நாட்டுக்குப் பிரயோசனம் இல்லை எனக் கூறுபவர்களும் உள்ளனர். எமது செயற்பாடுகளை பொறாமையுடனும் குரோதமனப்பான்மையுடனும் நோக்குபவர்கள் உள்ளனர். எமது அபிவிருத்தியை இகழ்ச்சி செய்கின்றனர்.

காலிமுகத்திடல் நிரப்பப்பட்டு பல நூறு ஏக்கர்களில் துறைமுக நகரம் அமைக்க நடவடிக்கை எடுக்கும் போது அதனையும் பொறாமையுடனும் குரோதத்துடனுமே பார்க்கின்றனர்.

இப்போது நகரங்கள் அமைக்கப்பட்டு இலங்கையின் வரைபடத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடல் நிலமாக்கப்பட்டு ள்ளது. வங்குரோத்து நிலையை அடைந்துள்ளோர் இதனை குறையாகவே பார்க்கின்ற னர்.

சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்தப் பார்க்கின்றனர். நாட்டுக்கு எதிராக அறிக்கைகளை சமர்ப்பித்து வருகின்றனர். இம்மாதம் 28 ஆம் திகதி எப்போது வரும் எமக்கெதிரான குற்றச்சாட்டு வரும் என அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றனர். அரசாங்கத்திற்குக் கிடைக்கப் போகும் பதில் என்னவென்று கற்பனை செய்து கொண்டிருக்கின்றனர். இது போன்ற வெளிநாட்டுக்கொள்கை எம்மிடமில்லை.

இவ்வாறு செயற்படுபவர்கள் அவர்களின் வெளிநாட்டுக் கொள்கையில் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதை மறக்க முடியாது. வடக்குக்குப் பருப்பு போட்ட சம்பவம், வெளிநாட்டுப் படையினர் எமது படையினரை அடக்கியாண்ட சம்பவம், யுத்த நிறுத்த உடன்படிக்கையை மேற்கொண்டு நாட்டைத் துண்டாடியமை, எனக்குக் கூட மடுத்திருத் தலத்துக்கு செல்வதற்கு புலிகளின் அனுமதி பெற வேண்டியிருந்த காலம் வடக்கிற்குச் செல்ல பிரபாகரனின் அனுமதி பெற வேண்டியிருந்த துரதிர்ஷ்டமான காலம் அது.

இதுபோன்ற வெளிநாட்டுக் கொள்கை எமக்குத் தேவையில்லை. நாம் இப்போது முழு உலகுடனும் சிறப்பான நட்புறவைக் கொண்டுள்ளோம். இங்கு சகவாழ்வு இல்லை எனக்கூறுபவர்களுக்கு தேர்தல் நடத்துவது முதல் அனைத்திலும் இங்குள்ள ஜனநாயக சுதந்திரத்தை நாம் குறிப்பிட விரும்புகின்றோம்.

அவர்களுக்குச் சொல்வதற்கோ செய்வதற்கோ எதுவுமில்லாமல் மக்கள் ஆதரவும் அற்றுப்போன நிலையில் எமக்கெதிராக வரும் உலக அழுத்தங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். தனிப்பட்ட ரீதியில் சேறு பூசுகின்றனர். தேசப்பற்றை நாம் விற்பவர்கள் என அவர்கள் கூறுகின்றனர்.

எனினும் தேசப்பற்றை அதிகமாக மக்கள் மனதில் பதிய வைத்து பெருமைப்படுபவர்கள் நாம் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

அவர்களும் வெளிநாடுகளுக்கு எமது வளங்களை விற்றனர். விற்கப்பட்ட அரச வளங்களை நாம் மீள அரசாங்கத்துக்குச் சுவீகரித்து மக்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். நமது தாய் நாட்டை நேசிப்பதற்கும் தாய் நாடு தொடர்பில் பெருமைப்படுவதற்கும் நாம் மனித உள்ளங்களையும் நாட்டையும் கட்டியெழுப்பியுள்ளோம். இது எமது பொறுப்பும் கடமையுமாகும். இதனால் தாய் நாட்டை நேசிப்பது நம் அனைவரினதும் பொறுப்பு.

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு மக்களின் பங்களிப்பு அவசியம். இதனை சீர்குலைக்கவோ இடைநடுவில் நிறுத்த வோ இடமளிக்க முடியாது என ஜனாதிபதி தெரிவித்தார். (2)

# அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றி

## ஐ.தே.கட்சி தலைவர் கூறுகின்றார்

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் தற்போது வெற்றி தமது கண்களுக்கு தென்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மொரட்டுவையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,


இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய காலம் வந்துள்ளது.

இந்தநிலையில் வெற்றியும் தமது கண்ணுக்கு தெரிகிறது. தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளில் இலங்கையின் அனைத்து தொழிற்றுறைகளும் வீழ்ச்சி அடைந்துள்ளன.

மகிந்த ராஜபக்சவின் குடும்பத்தினர் மாத்திரமே வளர்ச்சி அடைந்து வருகின்றனர் என்று அவர் கூறியுள்ளார். (2)

# மரண அறிவித்தல்

## அமரர் சண்முகவடிவேல் வேல்நாதன்



சாந்த சில்லாலை பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய சண்முகவடிவேல் வேல்நாதன் 15.03.2014 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சண்முகவடிவேல் நல்லபிள்ளையின் இரண்டாவது புத்திரனும், சிவகெங்கை, சிவமங்கை, செந்தில்வேல், வேல்நாயகி ஆகியோரின் சகோதரனும் பாரிசாத மலரின் அன்புக் கணவரும், இரஜிபன், றஜிதா, தர்ஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சத்திஜேஸ்வரனின் அன்பு மாமனாரும், ரிசான், கஜனன் , அஸ்விகாவின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக 18.03.2014 செவ்வாய்க்கிழமை இன்று முற்பகல் 10 மணியளவில் சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சாந்த சில்லாலை மேற்கு பண்டத்தரிப்பு.**

**தகவல்: செந்தில்வேல் (அண்ணா)**

(5837)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

751

## முதல் வழக்கில் வெற்றி

..."அப்படியானால் இவருடைய தட்சிணை என்ன ஆவது?" என்று கேட்டார் அக்பர்.

"நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவேன். எனக்கு என்று வழக்கறிஞனாக ஆக வேண்டும் என்று தோன்றுகிறதோ, அப்போதுதான் தட்சிணையும் தர முடியும்" என்றான்.

பிரமோத் பிஹாரி கூறுவது சரியே என்று நினைத்தார் அக்பர். உடனே அவர் நீதிபதியை நோக்கித் தீர்ப்பு வழங்கக் கூறினார்.

நீதிபதி அவர்கள் இருவரையும் நோக்கி, "இரு தரப்பினரின் வாதத்தையும் கூர்ந்து கவனித்தேன். என்னைப் பொறுத்தவரை இந்த வழக்கில் பிரமோத் பிஹாரியின் பக்கமே நியாயம் இருக்கிறது.



கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவேன் என்று இந்த தர்பாரில அவன் உறுதி அளித்துள்ளான்.

அவன் சொல்லை ஏற்றுக் கொண்டு, அவனுக்கு என்று வழக்கறிஞராக வேண்டும் என்று தோன்றுகிறதோ, அன்று அந்தத் தொழிலில் ஈடுபட்டு குருவின் தட்சிணையைத் திருப்பித் தரலாம். அதுவரை குரு காத்திருக்க வேண்டும். இதுவே என் தீர்ப்பு!" என்றார்.

அக்பர் உட்பட தர்பாரில் அனைவரும் இந்தத் தீர்ப்பைப் பாராட்டினர். இதை எதிர்பார்க்காத கிழவர் ஏமாற்றத்தினாலும், வருத்தத்தினாலும் உடல் குறுகிப் போனார்.

ஆனால் பீர்பால் மட்டும் தீர்ப்பைப் பாராட்டாமல் மிகவும் மௌனமாக இருந்ததை கவனித்த அக்பர், இந்தத் தீர்ப்பை மறு ஆய்வு செய்யுமாறு பீர்பாலிடம் கூறினார்.

அதைக்கேட்டதுமே கிழவரின் முகம் மலர்ந்தது. மிகவும் புத்திசாலியான பீர்பால் சரியான தீர்ப்பு வழங்குவார் என்று அவர் உறுதியாக நம்பினார்.

பீர்பால் இளைஞனை நோக்கி, "நீ கொடுத்த வாக்கில் உறுதியாக இருக்கிறாய் அல்லவா?" என்றார்.

"அதில் என்ன சந்தேகம்? கண்டிப்பாக அப்போது அதில் கிடைக்கும் வருமானத்திலிருந்து என் குருநாதருக்கு சேர வேண்டிய தட்சிணையைக் கட்டாயம் தந்து விடுவேன்" என்றான் இளைஞன்.

பிறகு கிழவரை நோக்கி, "பிஹாரியின் நிபந்தனையை நீங்கள் ஆரம்பத்திலேயே ஒப்புக் கொண்டீர்கள் அல்லவா?" என்று கேட்டார் பீர்பால். "ஆம் ஐயா!" என்றார் கிழவர்.

"அப்படியானால் சட்டப்படி இளைஞனின் தரப்பில்தான் நியாயம் உள்ளது. அவன் வழக்கில் வெற்றி பெற்று தட்சிணை தரும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டியது தான்" என்றார் பீர்பால். பீர்பாலையும், அக்பரையும் வணங்கிவிட்டு அவர் தள்ளாடித் தள்ளாடி வெளியேற, இளைஞன் பிஹாரி வெற்றிப் பெருமிதத்துடன் வெளியேறினான்.

திடீரென பீர்பால் பிஹாரியை அழைத்து, "பிஹாரி! இதுதான் சக்கரவர்த்தியின் நீதிமன்றத்தில் உன்னுடைய முதல் வழக்கு! உன்னுடைய வழக்கை விசாரிக்க வேறு வழக்கறிஞரை நியமிக்காமல் நீயே உன் தரப்பு நியாயத்தை வெகு அழகாக எடுத்துக் கூறினாய்" என்றார் பீர்பால். பிஹாரி மகிழ்ச்சியுடன், "நன்றி ஐயா!" என்றான்.

பீர்பால் தொடர்ந்து, "அதாவது உன்னுடைய முதல் வழக்கில் நீயே வழக்கறிஞராக இருந்து வாதாடி அதில் வெற்றி பெற்று விட்டாய் இல்லையா?" என்று பீர்பால் கேட்டார். "ஆம் ஐயா!" என்றான் பிஹாரி மகிழ்ச்சியுடன்.

"அப்படியானால் நீ வழக்கறிஞராக இருந்து வெற்றி பெற்ற முதல் வழக்கு இது! நீ வாக்களித்தபடியே, குருதட்சிணையை உன் குருவிற்கு இப்போதே இங்கேயே கொடுத்து விடு!" என்றார்.

ஒருகணம் திகைத்துப் போன அனைவரும், மறுகணமே கைதட்டி ஆர்ப்பரித்தனர். கிழவர் பீர்பாலுக்கு மனமார நன்றிகூற, அக்பர் பீர்பாலை மிகுந்த மகிழ்ச்சியுடன் தழுவிக் கொண்டார். (முற்றும்)



## 03.2014 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1241 - போலந்தின் கிராக்கோவ் நகரம் மங்கோலியர்களினால் சேதமாக்கப்பட்டது.
- 1438 - ஹாப்ஸ்பேர்க்கின் இரண்டாம் ஆல்பேர்ட் ஜேர்மனியின் மன்னனாக முடி சூடினான்.
- 1850 - அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1874 - வணிக உரிமைகளை வழங்கும் உடன்பாட்டில் ஹவாய் ஐக்கிய அமெரிக்காவுடன் கையெழுத்திட்டது.
- 1909 - ஐனார் டேசாவு குறுகிய அலை வானொலி அலைபரப்பியை உபயோகித்து முதலாவது ஒலிபரப்பாளரானார்.
- 1913 - கிரேக்கத்தின் முதலாவது ஜோர்ஜ் மன்னன் படுகொலை செய்யப்பட்டான்.
- 1915 - முதலாம் உலகப் போர்: கலிப்பொலி சமரில் பெரும் கடற்படைத் தாக்குதல் இடம்பெற்றது. பிரித்தானிய மற்றும் பிரெஞ்சுக் கப்பல்கள் மூன்று மூழ்கடிக்கப்பட்டன.
- 1922 - ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்ட மகாத்மா காந்தி ஆறு ஆண்டு சிறைத் தண்டனை பெற்றார். இரண்டு ஆண்டுகளில் விடுதலை ஆனார்.
- 1937 - டெக்சாஸ் மாநிலத்தில் நியூ லண்டன் நகரில் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட இயற்கை வாயு வெடிப்பில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொல்லப்பட்டனர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்சையும் ஐக்கிய இராச்சியத்தையும் எதிர்த்துப் போரிட ஹிட்லரும் முசோலினியும் கூட்டிணைந்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: 1,250 அமெரிக்க குண்டுவீச்சு விமானங்கள் பேர்லின் நகரைத் தாக்கின.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானில் ஜப்பானுக்கும் நேச நாடுகளிக்கும் இடையில் ஒகினவா சமர் ஆரம்பமாகியது.
- 1962 - அல்ஜீரிய விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.
- **1965 - சோவியத் விண்வெளி வீரர் அலெக்சி லியோனொவ் வஸ்கோத் 2 விண்கலத்தின் வெளியே 12 நிமிடங்கள் நடமாடி விண்வெளியில் நடந்த முதல் மனிதன் ஆனார்.**
- 1989 - எகிப்தில் 4,400 ஆண்டுகள் பழமையான பதனிடப்பட்ட உடல் பிரமிட் ஒன்றினுள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1990 - கிழக்கு ஜேர்மனியில் 1932 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற் தடவையாக தேர்தல் இடம் பெற்றது.
- 2003 - ஐக்கிய அமெரிக்கா ஈராக்குடன் போரை ஆரம்பித்தது. ஈராக்கின் மத்திய வங்கியிலிருந்து 1 பில்லியன் பெறுமதியான பணம் சதாம் ஹுசேனினாலும் அவரது குடும்பத்தினராலும் எடுத்துச் செல்லப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1828 - வில்லியம் கிரேமர், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ. 1908)
- 1837 - குரோவர் கிளீவ்லாண்ட், ஐக்கிய அமெரிக்காவின் 22ஆவது, 24ஆவது குடியரசுத் தலைவர (இ. 1908)
- 1858 - ருடோல்ஃப் டீசல், ஜேர்மனியக் கண்டுபிடிப்பாளர் (இ. 1913)
- 1919 - இந்திரஜித் குப்தா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவர். (இ. 2001)
- 1936 - பிரடெரிக் கிளார்க், தென்னாபிரிக்க ஜனாதிபதி, நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புக்கள்

- 1996 - ஒடீசியஸ் எலீட்டிஸ், நோபல் பரிசு பெற்ற கிரேக்க எழுத்தாளர் (பி. 1911)
- 2007 - பாப் வூல்மர், துடுப்பாட்டக்காரரும் துடுப்பாட்ட பயிற்சியாளரும் (பி. 1948)



### அலெக்சி லியோனொவ்



அலெக்சி ஆர்க்கிபோவிச் லியோனொவ் 1934 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி பிறந்தார். இவர் சோவியத்- ரஷ்யாவின் இளைப்பாறிய விண்வெளி வீரரும், சோவியத் வான் படையின் ஜெனரலும் ஆவார். இவர் மார்ச் 18, 1965 இல் விண்வெளி யில் நடந்த முதல் மனிதன் என்ற பெயரைப் பெற்றார். இவர் 1965 இலும் 1975 இலும் இரண்டு தடவைகள் சோவியத் ஒன்றியத்தின் வீரர் என்ற விருதைப் பெற்றார். லெனின் விருது பெற்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....அதனைக் கண்ட பார்வதி, சிவனைப் பார்த்து, "சுவாமி கருடர், காந்தருவர், இயக்கர், பூதர், மருத்துவர், போகியர், சித்தர், முனிவர், வானவர் முதலான சகலமானவர்களும் நம் இருவரையும் சேர்த்தே வலம் வந்து வணங்கிச் செல்கின்றனர். இந்தப் பிருங்கி ரிஷி மட்டும் என்னை விலக்கி, உம்மை மட்டும் வலமாக வந்து வணங்கி நிற்கிறாரே, இதன் காரணம் என்ன?" என்று கேட்டார்.

"தேவி, புலனனைத்தையும் வென்று பற்றினை நீக்கி, உண்மை உணர்ந்தோரது மனங்களில் சென்று, அவர்களது அறிவினில் பேரின்பமாகிய அமுதினைப் பொழிகின்ற ஞானமாக நான் இருப்பதால் என்னை வலம் வந்து வணங்கியவர்கள் மறுபிறப்பு இல்லாத மோட்ச வாழ்வைப் பெறுவார்கள். நீ என்னுடன் பார்வதி சொரூபமாக இருப்பதால் உன்னை வணங்கியவர்கள் இஷ்டகாமியார்த்த மோட்சங்களைப் பெறுவர். நம்மை வலம் வந்த சகலமானவர்களும் இஷ்ட காமியை மோட்சார்த்தங்களைப் பெறுவதற்காகவே வணங்கி வலம் வந்தனர். ஆனால் இந்தப் பிருங்கி ரிஷி மட்டும் முத்தியெனும் மோட்ச வீட்டைப் பெறுவதற்காக என்னை மட்டும் வலம் வந்து வணங்கினார்" என்று கூறினார்.

பிருங்கியின் நிலை கண்டு பார்வதி தேவிக்கு சிரிப்புதான் வந்தது. சக்தியில்லாமல் சிவனை வணங்கிடலாம் என்று நினைத்த பிருங்கியிடம், "பிருங்கி முனிவரே! முக்தி மட்டும் போதும் என்று நினைத்ததால் சிவனை வலம் வந்தீர். அந்தச் சிவனை வணங்குவதற்கும் சக்தி தேவை என்பதை ஏன் மறந்தீர்? சக்தியில்லாமல் சிவன் எவ்விதம் உண்டாயிற்று. என்னை வணங்கத் தேவையில்லை என்று முடிவு செய்த நீர், உம்முடைய


பிருங்கி முனிவர்

சரீரத்தில் சக்தியென்ற என் அம்சமாகிய மாமிசத்தை மட்டும் சுமந்து கொண்டிருக்கலாமோ?" என்று கேலி பேசினார்.

பார்வதியின் கேலிப் பேச்சினால் அங்கேயே உட்கார்ந்து தனது சரீரமாகிய மாமிசத்தை உதறிய பின்னர் எழுந்து நிற்க சக்தியற்றவராகி கீழே விழுந்தார் பிருங்கி முனிவர்.

தன் பக்தன் சக்தி இழந்து கண்ணெதிரே தவிப்பதைக் கண்ட சிவபெருமான் இரக்கம் கொண்டு உடனே எழுந்து நடக்கும்படியாக வலிமை மிக்க கைத்தடி ஒன்றை அவருக்கு வழங்கினார்.

ஈசனின் கைத்தடியோடு எழுந்து நின்ற பிருங்கி முனிவர் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக மீண்டும் ஒருமுறை சிவ பெருமானை மட் டும் வலம் வந்து வணங்கிச் சென்றார்.

ஏற்கனவே பிருங்கியின் செயலால் கோபமாயிருந்த பார்வதிக்கு ஈசன் செய்த செயல் அதைவிடப் பெருங் கோபத்தை மூட்டியது. தன்னை வேண்டாம் என்று ஒதுக்கு வைத்து வழிபடு பவரை ஈசன் இப்படித் தாங்கிப் பிடிக்கிறாரே என்று மனம் கொதித்தது.

சிவமும் சக்தியும் தனித்தனி திருமேனி கொண்டு விளங்கியதால்தானே பிருங்கி சிவத்தை மட்டும் தனியே வலம் வந்தார். சிவமும் சக்தியும் சரிபாதியாக, ஒரே திருமேனியுடன் விளங்கினால் இப்படி நடந்திருக்குமா?

**ஆன்மீகம் 65**

என்று எண்ணிய பார்வதி ஈசனின் உடலில் சரிபாதி பெற தவம் செய்யவும் முடிவு செய்தார்.

தவம் செய்யும் இடம் புனிதம் நிரம்பியதாக இருக்க வேண்டுமே என்பதற்காக பூவுலகமெங்கும் சுற்றிப் பார்த்து பூலோக கயிலாசமாகிய சதுரகிரியில் சட்டை முனிவர் ஆசிரமத்தில் வந்து கல்லால மரத்தின் அடியில் அமர்ந்து தன் தவத்தைத் துவங்கினார் பார்வதி தேவி.

பார்வதி தேவி சதுரகிரிக்கு வருவதற்கு முன் பன்னிரண்டு ஆண்டுகள் மழை பொழியாது வறட்சி கண்டிருந்தது.

அன்னையின் வரவால் பல ஆண்டுகளாக மழையே காணாமல் வறண்டு போயிருந்த சதுரகிரியில் மழை பொழிந்தது.

இயற்கை பூத்துக் குலுங்கியது. செடி கொடிகள் துளிர்த்தன. மழையின் வரவால் சுனைகளில் ஊற்றெடுத்தது. பூக்களெல்லாம் பூத்துக்குலுங்கியதால் சதுரகிரியே வசந்த லோகமாகக் காணப்பட்டது.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்




77

....செம்மல் முகம் கண்டதும் எல்லோர் முகமும் சூரியனைக் கண்ட தாமரையாயின. "வாழ்க" கோஷம். செம்மல் தன் கை தூக்கி மகிழ்ச்சி பொங்க ஆட்டினார்.

செம்மல் அதன்பின் இறங்கினார். அவரைத் தாங்கிப் பிடிக்க காவல் அதிகாரி வந்தார். அவர் தன்னைப் பிடிக்க விடவில்லை. விமானத்திலிருந்து இறங்கும் படிகளில் அவரே இறங்கி வந்தார். அவர் எப்படி வருவாரோ என்று ஆம்புலன்ஸ் வேனில் நாற்காலி வைத்துக் கொண்டு இருந்தனர். அதை வேண்டாம் என்றார். தன் கார் வந்து இருக்கிறதா என்று கேட்டு அதைக் கொண்டுவரச் செய்து ஏறிப் போனார். அவருடன் வழக்கமாக செல்லும் உதவியாளர்கள் போனார்கள்.

மேடையை நெருங்கினார். கார் மேடை அருகே கொண்டு வரப்பட்டதும் இறங்கி, வழக்கம் போல் ராஜ நடையில் மேடை மேல் ஏறினார். மைக் அருகே நின்று மக்கள் வெள்ளத்தைப் பார்த்து வணங்கினார். மக்களது "வாழ்க" கோஷம் கேட்டு கையை உயர்த்தி ஆட்டி, அவர்களை அமரச் சொன்னார். மேடைக்கு கீழே யார் யார் உட்காந்திருக்கிறார்கள் என நோட்டமிட்டார். கீழே அமர்ந்து இருந்த ம.பொ.சி. அவர்களை மேடைக்கு வரச் சொன்னார். அவர் வந்ததும் கட்டித் தழுவி அமர வைத்தார்.

செம்மலுக்கு அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் உயிர் கொடுத்தனர். ஆனால் குரல் கொடுக்கவில்லை. செம்மல் பேசும்போது குண்டடிபட்டபோது இருந்ததை விட மோசமானது. பேச்சு வரவில்லை நாவின் இயக்க நரம்புகள்



சுற்றிக் கொண்டன. அதனை அழுத்தி ஓர் இரண்டு [illegible] முடியும். நரம்பு[illegible] பயிற்சியளிக்க முன் வந்தனர். பிள்ளைக்கு பேசப் பழகிக் கொடுப்பதைப் போல் பயிற்சி நடந்தது.

குண்டடிபட்டபோது மறுபிறவி எடுத்தார். அது இரண்டாம் பிறவி. இப்போது மூன்றாம் பிறவி. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. மனிதனுக்கு மறு பிறவி உண்டு மறுசாவு இல்லையென்று. செம்மலுக்கு [illegible]னது. அவருக்கு [illegible] மரணம் மாய்ந்தது. முப்பிறவி எடுத்தார். மூன்றாம் தடவையும் அவ்வரே முதல்வரானார். ஒன்பதாவது, பத்தாவது இப்போது பதினொன்றாவது முதல்வரும் அவரே ஆனார். இது வையகம் கண்ட புதுமை.

"என் விரலசைத்தால் வெற்றி என் பக்கம்" என்று ஒரு படத்தில் பாடலாக எழுதியதை "அவன் விரலசைத்தால்" என்று செம்மல் மாற்றச் சொன்னதை இறைவன் மெச்சி தன் விரலை அசைத்தான்.... அசையாமலிருந்த இவரும் அசைந்தார். நாடே இவருக்கு இசைந்தது.

## இரும்புக் கை


கோபம் வந்தால் தன் வேலையாட்களைச் செம்மல் அடித்து விடுவார். அதன்பின் அந்த வேலையாளுக்குக் காசு கொடுப்பார். இப்படி காசு வாங்குவதற்காகவே ஏதாவது தவறு செய்து அதிகமாக அடி வாங்கியவர் செம்மலின் செல்லப் பிள்ளையாக வளர்ந்த ராமகிருஷ்ணன். ராமகிருஷ்ணன் சொல்லுவான் அண்ணன் கை இருப்புக் கை என்று!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை தண்டிக்க வேண்டும் என்பது கூட்டமைப்பின் நோக்கமல்ல

## இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டு



**இலங்கையைத் தண்டிக்க வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம் கிடையாது என பாராளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

இலங்கையைத் தண்டிக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில முக்கியமாக ஆற்றப்பட விருந்த கடமைகளை இலங்கை அரசாங்கம் இதுவரையில் முன்னெடுக்கத் தவறியுள்ளமையை சுட்டிக்காட்டுவதே நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் வலுவான, ஸ்திரமான தீர்மானங்களை எடுக்கும் அரசாங்கமாக கருதப்பட்ட போதிலும், பிழையான பாதையில் செல்வதே வருத்தமளிக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

வட மாகாண ஆளுநரின் மீது தனிப்பட்ட குரோதங்கள் எதுவும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இராணுவ அதிகாரியொருவர் அதுவும் அரசாங்கத்திற்காக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் ஒருவரை ஆளுநராக நியமிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர் பல்வேறு பொதுமக்கள் விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மாகாணசபை முறைமை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# இலங்கை நேர்மையான பாதையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடு

## இலங்கைக்கான சீனத்தூதுவர் பெருமிதம்

(கொழும்பு)

இலங்கையைப் பற்றி வேறு நாடுகளிலிருந்து சிலர் தவறான அபிப் பிராயத்தைத் தெரிவிக்கின்ற போதும்நான்இந்நாட்டில்கண்டுணரும் உண்மை நிலையை அவர்களுக்குத் தெளிவுபடுத்தத் தவறுவதில்லை என இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஹெனயுங் தெரிவித்துள்ளார்

காலி - மாத்தறைக்கான அதிவேக நெடுஞ்சாலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை தவறான வழியில் பயணிக்கும் ஒரு நாடா என என்னிடம் கேட்டவர்களுக்கு இல்லை இலங்கை மிக நேர்மையான பாதையில் பயணித்து முன்னேறி வரும் நாடு என நான் கூறினேன்.

ஏனெனில் நான் பதவியேற்று இரண்டு வருடங்கள் இலங்கையில் தங்கியுள்ள காலத்தில் நான் கண்டுணர்ந்த உண்மை அது எனவும் தெரிவித்தார்.

நான் இலங்கைக்கான சீனத் தூதுவராகப் பதவியேற்று இரண்டு வருடங்கள் ஆகின்றன.


நாளுக்கு நாள் இந்த நாடு முன்னேற்றமடைந்து வருவதை நான் கண்கூடாகக் கண்டு வருகிறேன். இலங்கை உலகின் முக்கிய அவதானத்திற்கு உட்பட்டு வரும் நாடு.

இந் நாட்டைப் பற்றி பலரும் பல விதமாகக் கூறினாலும், இது சரியான பாதையில் பயணிக்கின்ற நாடு என்பதே எனது கருத்து. இந்த நாட்டில் இன்னும் மேற்கொள் ளக் கூடிய பல விடயங்கள் இருப்பது உண்மை.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு கடந்த நான்கரை ஆண்டுகளில் ஆசியாவில் மட்டுமன்றி முழு உலகிலும் பிரபல்யமான நாடாக இலங்கை மாறி வருகிறது எனவும் அவர் தெரிவித்தார். (2)







யாழ்.இந்துக்கல்லூரி விஞ்ஞான மன்றத்தினரின் விஞ்ஞான தினமும் இந்து விஞ்ஞானி இதழ் வெளியீட்டு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் இந்து விஞ்ஞானி இதழ் வெளியிடப்படுவதையும் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

## 3500 பேர் கடந்த ஆண்டில் தற்கொலை

இலங்கையில் கடந்த ஆண்டில் சுமார் 3ஆயிரத்து 500 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதில் 2ஆயிரத்து 700 பேர் ஆண்கள் எனவும் எஞ்சியவர்கள் பெண்கள் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

குடும்ப தகராறு, காதல பிரச்சினை, மன அழுத்தம், தீராத நோய் போன்ற காரணிகளினால் அதிகளவானவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

தற்கொலை செய்து கொண்டவர்களில் அதிகளவான அதாவது 80 வீதமானர்கள் ஆண்களாவர்.

2012ஆம் ஆண்டிலும் 3ஆயி ரத்து 526 பேர் வரையில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். (2)

## தேர்தல் சட்டங்களை மீறவேண்டாம்

விருப்பு இலக்கத்தை காட்சிப்படுத்தல் தொடர்பில் காணப்படும் தேர்தல் சட்டத்தை மீறி வேட்பாளரகள் பலர் செயற்பட்டு வருவதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தின்படி விருப்பு இலக்கத்தை வேட்பாளரது அலுவலகத்தில் மாத்திரமே காட்சிப்படுத்த முடியும.

ஆனால், பல வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்திற்கு பல்வேறு வழிகளில் விருப்பு இலக்கத்தை காட் சிப்படுத்துவதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

எனவே தேர்தல் சட்டங்களை மீறாது தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுமாறு தேர்தல்கள் செயலகம் வேட்பாளர்களிடம் கோரியுள்ளது. (2)

## அங்கீகரிக்கப்படாத பொலிஸாரைப்போல பொதுபலசேனா செயற்படுகிறது-ஹக்கீம்

சர்வதேச ரீதியாக இலங்கை பிரச்சினைகளை சந்திப்பதற்கு பொதுபல சேனா என்ற சிங்கள அடிப்படைவாத அமைப்பே காரணம என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஏனைய மதங்களுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதில் பொதுபல சேனா அங்கீகரிக்கப்படாத பொலிசாரைப் போல செயற்படுகிறது. 2012 ஆம் ஆண்டு பொதுபல சேனா ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே இலங்கைக்கு பிரச்சினைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் குறித்த அமைபபு ஏனைய மத ஸ்தலங்கள் மீது நடத்தி வரும் தாக்குதல்கள் காரணமாகவே சர்வதேச ரீதியாக இலங்கை மீது அழுத்தங்கள் அதிகரித்துள்ளன என்று அவர் கூறி இருக்கிறார்.

எவ்வாறாயினும் பள்ளிவாசல்கள மது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் ஆதாரங்களுடனான அறிக்கை ஒன்றை மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையிடம் வழங்கியமைக்காக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## முன்னாள் உயர் பொலிஸ் அதிகாரிகள் நான்காம் மாடிக்கு செல்லத் தடை

(கொழும்பு)

முன்னாள் உயர் பொலிஸ் அதிகாரிகள் நான்காம் மாடிக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் முன்னாள் உயர் பொலிஸ் அதிகாரிகள், புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தும் நான்காம் மாடிக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் போன்ற சில உயர் அதிகாரிகள், கனிஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர்கள் மீது அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சில முன்னாள் உயர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்டத்தரணிகளாகவும் செயற்பட்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான முன்னாள் அதிகாரிகள் நான்காம் மாடி க்குச் சென்று தங்களது கட்சிக்காரர்கள் பற்றிய தகவல்களை சட்டவிரோதமான முறையில் கனிஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இந்த நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் பொலிஸ் திணைக்களம் புதிய சுற்றுநிருபம் ஒன்றை வெளியி ட்டுள்ளது, (2)

## கண்ணை மூடிக்கொண்டு அரசின் நடவடிக்கைகளை ஆதரிக்க முடியாது

### ஹசன் அலி தெரிவிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு தேசப்பற்று உண்டு என கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

எனினும், அரசாங்கத்தின் அனைத்து உத்தரவுகளையும் பின்பற்றப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கண்ணை மூடிக்கொண்டு அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் ஆதரிக்க முடியாது எனவும் அது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆனின் வழி நடப்பதாகவும் நாட்டுக்கு துரோகம் இழைக்கப போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எமது பக்க நியாயங்களை சரியான முறையில் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மை இனம் என்ற காரணத்தினால் துரோகி முத்திரை குத்தப்படுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். (2)

## இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்தடையை ஏற்றுக்கொள்ள முடியாது

(சென்னை)

இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிப்பதனை முற்று முழுதாக தடை செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரு நாடுகளினதும் மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதில் எவ்வித சிரமமும் கிடையாது என இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


எனினும். இலங்கை கடற்பரப்பில் முற்று முழுதாகவே இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கக் கூடாது என்ற தடையை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட ஒரு சில நாட்களுக்காவது மீன்பிடியில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைக்குச் செல்லும் கர்ப்பிணிகளுக்கு



கர்ப்ப காலத்தில் பெண்கள், ஒவ்வொரு நொடிப் பொழுதையும் ரசித்து, மகிழ்ந்து, மனதையும், உடலையும் உற்சாகமாக வைத்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியம். இந்தக் காலகட்டத்தில் நம் உடல், நம்முடைய கட்டுக்குள்




இருக்காது. நாள் முழுக்க வேலை செய்ததுபோன்ற உணர்வு இருக்கும். அலுவலகத்துக்குச்சென்று வரும் பெண்களுக்கு, அதனால் ஏற்படும் பயணக் களைப்பு, வேலையை முடிக்க வேண்டுமே என்ற பரபரப்பால் ஏற்படும் மன அழுத்தம் எனப் பல்வேறு காரணங்களால், உடல் நலம் பாதிக்கப்படும்.

தாயைவிட, வயிற்றில் உள்ள குழந்தை அதிக பாதிப்புக்கு உள்ளாகலாம். வேலைக்குச் செல்லும் கர்ப்பிணிகளுக்கு சுகப்பிரசவம் என்பதும் சற்றுப் பிரச்சினைதான். வேலைப்பளுவால் ஏற்படும் மன அழுத்தத்தால் வயிற்றில் உள்ள குழந்தைக்குப் போதிய ஒட்சிசன், இரத்தம், சத்துக்கள் கிடைக்காமல் போகும். எனவே, கீழுள்ள சில எளிய வழிமுறைகளைப் பின்பற்றினால், இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும்.

### உணவு

கர்ப்ப காலத்தில் செரிமான மண்டலம் மெதுவாகத்தான் இயங்கும். குழந்தையின் வளர்ச்சியால் வயிறும் பெரிதாகிக்கொண்டே போகும். இதனால், ஒரே நேரத்தில் நன்றாகச் சாப்பிட முடியாது. ஆனால், இந்தத் தருணத்தில் தான் உடலுக்கு அதிக அளவு சத்துக்கள் தேவைப்படும். எனவே, மூன்று வேளை என்பதை, சிறிது சிறிதாகப் பிரித்து ஆறு வேளைகளாகச் சாப்பிடுங்கள். சரியான நேரத்தில், போதிய இடைவெளியில் சத்தான உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இது, வயிற்றில் வளரும் குழந்தைக்கும் என்பதை மனதில்கொள்ள வேண்டும்.

வீட்டை விட்டுக் புறப்படும்போது அப்பிள், கொய்யா, வாழைப்பழம், பேரிக்காய் போன்ற சத்துள்ள பழங்களை நறுக்காமல், எடுத்துச் செல்ல வேண்டும். பழங்களைக் கடித்துச் சாப்பிடுவது நல்லது. முடியாதபட்சத்தில் ஜூஸாகச் செய்து சாப்பிடலாம். இதனூடாக உடல் வறட்சி நீங்குவதுடன் வயிறும் நிறையும்.

எப்போதும்சுட்டாறிய நீரை உடன் எடுத்துச்செல்ல வேண்டும். ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை என 12 டம்ளர் தண்ணீர் குடிப்பது நல்லது.



உடலுக்கு ஆற்றல் தரக்கூடிய உலர் பழங்களைக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். அதிக வேலைச் சுமையின்போது, வாயில் போட்டு மென்று சாப்பிடலாம்.

நீண்ட நேரம் சாப்பிடாமல் இருந்தால், இரத்தத்தில் உள்ள குளுக்கோஸின் அளவு குறைய ஆரம்பித்துவிடும். இதனால், சிசுவின் வளர்ச்சி பாதிக்கப்படலாம். எனவே, எப்போதும் கையில் ஒரு பிஸ்கட் பக்கற்றை வைத்துக் கொணடு, வயிற்றைக் காயப்போடாமல், பசிக்கும்போது சாப்பிடுவது அவசியம்.

இரவில் ஆவியில் வேகவைத்த அல்லது எளிதில் ஜீரணிக்கக்கூடிய உணவுகளைச் சாப்பிடுவது நல்லது.

நெஞ்செரிச்சல், எதுக்களிப்பு போன்ற பிரச்சினைகள் இருந்தால், வறுத்த, பொரித்த, அதிகம் காரம், எண்ணெய் உணவுகளைச் சாப்பிடக் கூடாது.

### உடற்பயிற்சி

அலுவலகத்தைச் சுற்றி நடைப்பயிற்சி செய்யுங்கள். நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பதால் காலில் இரத்தம் தங்குதல், வெரிகோசிஸ் வெய்ன், இரத்தம் கட்டிப்போதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். இதற்கான வாய்ப்பை நடைப்பயிற்சி தடுக்கிறது. கடினமான உடற்பயிற்சிகள், அதிக எடைகொண்ட பொருள்களைத் தூக்குவது போன்றவற்றைத் தவிர்த்துவிடுங்கள்.

அலுவலகம் முடிந்து வீடு வந்ததும், நல்ல வெளிச்சமான பகுதியில் காலாற சிறிது நேரம் நடக்கலாம். கடின வேலைகளைத் தவிர்த்து, முடிந்தவரை கர்ப்ப காலத்தில் எடையையும் கட்டுப்பாட்டுக்குள் வைக்கலாம்.

அலுவலகத்தில் போதிய இடைவெளியில் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். அந்த நேரத்தில் ஓய்வாக அமர்ந்து மனதை அமைதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இது, வேலையால் ஏற்படக்கூடிய மன அழுத்தத்தைப் போக்க உதவும்.

### பயணம்

வேலைக்குச் செல்லும்போது, பருத்தி ஆடைகளை அணிவதன் மூலம், இறுக்கத்தைத் தவிர்க்கலாம்.

பேருந்தில் அலுவலகம் செல்லும்போது குமட்டல், வாந்தி, சோர்வு ஏற்படலாம். தானாகவே மருந்துகளை வாங்கிச் சாப்பிடக் கூடாது.

பேருந்து, அலுவலகம் என எந்த இடத்திலும் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் தொடர்ந்து நிற்பது நல்லதல்ல. கால் நரம்புகள் சுருண்டுகொள்ளும். கெண்டைக்கால் வலி வரலாம். Deep Vein Thrombosis பிரச்சினை ஏற்படும். உட்கார்ந்து பயணிப்பது நல்லது. வீடு திரும்பியதும் மிதமான வெந்நீரில் கால்களை வைத்து எடுக்கவும். இரண்டு வேளைகள் குளிப்பது நல்லது.

இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை, அவசியம் சிறுநீர் கழிக்க வேண்டும். சிறுநீரை கட்டுப்படுத்தி வைப்பதால், நீர்க்கடுப்பு, கல் அடைப்பு வரலாம்.

கணவருடன் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போதும், வண்டியை ஓட்டிக் கொண்டு செல்லும் போதும் மேடு பள்ளம் பார்த்துச் செல்ல வேண்டும். இதனால், வயிற்றில் உள்ள குழந்தைக்கு அதிர்வு ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

குதிக்கால்பாதணியை அணியவே கூடாது. தடுக்கி விழ நேரலாம். இதுவும் குழந்தைக்கு அதிர்வை ஏற்படுத்தும்.

### நிம்மதியான தூக்கம்

பேறு காலத்தில் மசக்கையால் வாந்தி, மயக்கம், அஜீரணம், சோர்வு காரணமாக சாப்பாட்டில் நாட்டமின்மை ஏற்படலாம். தூக்கமின்றித் தவிக்கலாம். அல்லது அதீத தூக்கம் வரலாம். அலுவலகத்தில் நடந்த சில கசப்பான விடயங்களால் தூக்கம் இல்லாமற் போகலாம். தூக்கம் தொலைந்தால், மறுநாள் அன்றாடக் கடமைகளைக்கூடச் செய்ய முடியாமல் அவதிப்பட வேண்டியிருக்கும். மேலும், இரவில் அடிக்கடி சிறுநீர் கழிப்பதற்காக எழுவதும், கால் நரம்புகள் முறுக்கேறிக்கொள்வதும்




சகஜம்.

குறிப்பிட்ட நேரத்தில் தூங்கிவிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குறைந்தது ஆறு முதல் எட்டு மணி நேரத் தூக்கம் அவசியம். இது, வயிற்றில் வளரும் குழந்தைக்கும் நல்லது.

படுக்கச் செல்வதற்கு முன்பு, அகலமான வாளியில் வெந்நீரை நிரப்பி, அதில் எலுமிச்சைச் சாறு விட்டு 10 நிமிடங்கள் கால்களை அதில்வைத்து, எடுத்துத் துடைத்த பின்னர் தூங்கச் செல்லலாம்.

கர்ப்பிணிகளுக்கென்று விற்கப்படும் சற்றே உயர்ந்த தலையணைகளை வாங்கிப் பயன்படுத்துவது நல்லது.

# மீனவர்கள் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைப்பெற விருப்பம்

## இராமேஸ்வர மீனவர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் இம்மாதம் 25 ஆம் திகதி நடைபெறும் இரண்டாவது சுற்றுப்பேச்சுவார்த்தையில் நிச்சயமாக நாம் கலந்துகொண்டு இலங்கை- தமிழக மீனவர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வொன்றை காண நாம் ஆயத்தமாகவிருக்கின்றோமென இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் எ. எமிரிட் தெரிவித்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக இராமேஸ்வரம் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கத் தலைவர்களும் வருகை தந்திருந்தனர்.

இலங்கை- தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பாக அவர்களிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இழுவைப் படகுகள் மூலம் மீன் பிடிப்பதை உடனடியாக நிறுத்துவது சாத்தியப்படக் கூடியதொன்றல்ல. 30 வருடகால யுத்தத்தின்போது வட பகுதி மீனவர்கள் பட்ட கஷ்டங்கள், வேதனைகள் எங்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் விட்டுக்கொடுக்கத் தயார்.

இரு தரப்புமே பாதிக்கப்படாதவாறு பேச்சுவார்த்தையை நடத்துவதே எமது இலக்கு. தமிழகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது நாம் இலங்கை கடற்பரப்பிற்குள் வருவதில்லையென்று உறுதியளித்திருந்தோம். கடந்த பேச்சுவார்த்தை நடந்த தினத்திலிருந்து 10 நாட்களுக்குப் பின்னர் நாம் இலங்கை கடற்பரப்புக்கு வருவதில் லையென்றே வாக்குறுதியளித்திருந்தோம். ஆனால், பேச்சுவார்த்தை நடந்த மறுதினத்திலிருந்து எமது மீனவர்கள் தொடர்ந்தும் கைதானார்கள். அந்த ஒப்பந்தத்தை மீறியவர்கள் நாங்களல்ல.

எனிலும் இவ்விடயம் இரு தரப்பும் பேசி தீர்க்கப்பட வேண்டியதொன்று. எனவே, இம்முறை நடைபெறும் பேச்சுவார்த்தையில் எவருக்கும் பாதிப்பு ஏற்படாமல் தீர்த்துக் கொள்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இம்மாதம் 25 ஆம் திகதி கொழும்பு பேச்சுவார்த்தையில் எமது பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்வார்களென அவர் தெரிவித்தார். (2)

# பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 21 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம்

உடனடியாக அமுலாகும் வகையில், அநுராதபுரம் - திரப்பன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட 21 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

திரப்பன பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்து பிரிவு பொலிஸாரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரிவில் கடமையாற்றி வந்த 21 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களை வேறு பொலிஸ் நிலையங்களில் இணைத்துக் கொள்ளுமாறு அநுராதபுரம் பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக வேறு பொலிஸ் நிலையங்களிலிருந்து உத்தியோகத்தர்கள் பதிலீடு செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்து பிரிவை கலைக்குமாறு பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் உத்தரவிட்டிருந்தார்.

திரப்பன மற்றும் புத்தளம் முந்தல் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தர்களே அதிகளவில் சாரதிகளிடமிருந்து இலஞ்சம் பெற்றுக் கொள்வதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நீண்ட விசாரணைகளின் பின்னர் திரப்பன பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்து பிரிவினர் முறைகேடுகளில் ஈடுபட்டு வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த பிரிவில் கடமையாற்றி வந்த பொறுப்பதிகாரி உள்ளிட்ட 21 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறலா? ஆட்சி மாற்றமா?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நாடுகளிடம் அமெரிக்கா முன்மொழிந்துள்ள தீர்மான வரைவுக்கு ஆதரவு தேடும் முயற்சிகளும், அதனைத் தோற்கடிப்பதற்கான நகர்வுகளும் ஜெனிவாவில் தீவிரம் பெற்றுள்ளன. இரண்டு தரப்புகளுமே, உறுப்பு நாடுகளினதும், வாக்களிக்கும் உறுப்புரிமை பெற்றிராத நாடுகளினதும் ஆதரவைக் கோரி நிற்கின்றன. ஏட்டிக்குப் போட்டியாக, இணை அமர்வுகள், கூட்டங்களை ஒழுங்கு செய்து, தமது ஆதரவை உறுதிப்படுத்துவதில் இருதரப்பும் மும்முரம் காட்டுகின்றன.

இந்தநிலையில், அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மான வரைவை முன்வைத்து ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவை நகர்வுகளுடன் தொடர்புபடாத தரப்புகள் மத்தியிலும் பலத்த விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இத்தகைய விவாதங்களில்,

1.சர்வதேச போர்க்குற்ற விசாரணையை முன்வைக்காமல், அமெரிக்கா ஏமாற்றி விட்டது.

2. கடந்தகாலங்களைப் போன்றே தமிழர் தரப்பு சர்வதேச சமூகத்தை நம்பி ஏமார்ந்துவிட்டது. இனியும் இவ்வாறிருக்கக் கூடாது.

3. அமெரிக்காவின் இலக்கு குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதல்ல, ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதே.

4. இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீட்டுக்குக் காரணம், இங்கு இராணுவத் தளத்தை அமைத்துக் கொள்வதே.

என்பன போன்ற கருத்துகள் முன்வைக் கப்படுவதைக் காணமுடிகிறது.

இந்தநிலையில், இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் எதிர்பார்ப்பு என்ன என்ற கேள்வி பலரிடமும் தோன்றுவது இயல்பு. இந்த விவகாரத்தில் அமெரிக்காவின் ஒரே நோக்கம், தமது நலன்களை அடைவது மட்டும்தான் என்று முழுமையாக கூறமுடியாது.

ஜெனிவாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் தமரா குணநாயகம், ஒரு இடதுசாரி சிந்தனை கொண்டவர். இலங்கையில் தளம் அமைப்பதற்காகவே அமெரிக்கா இந்த நகர்வில் ஈடுபடுகிறது என்று அவர் வாதிடுவது முற்றிலும் சரியானதாகத் தெரியவில்லை. ஏனென்றால், இலங்கை ஒரு மூலோபாய கேந்திரம் மிக்க இடமாக இருந்தாலும், இங்கு இராணுவத் தளம் ஒன்றை அமைக்கும் அளவுக்கு அமெரிக்காவிடம் திட்டங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

அதாவது, அயல்நாடான இந்தியாவின் எதிர்ப்பை அது சம்பாதித்துக் கொடுக்கும் என்பது அமெரிக்காவுக்கு நன்றாகவே தெரியும். இலங்கையில் தளம் ஒன்றை அமைப்பதற்காக, ஆசியாவில் மிகப்பெரிய சந்தை வாய்ப்பு ஒன்றை இழக்க அமெரிக்கா தயாரில்லை. அதாவது 100 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட இந்தியாவை, தமது பொருட்களை ஏற்றுமதி செய்யும் ஒரு நல்ல சந்தையாகவே அமெரிக்கா பார்க்கிறது.

குறிப்பாக போர்த்தளபாட ஏற்றுமதி மூலம் நல்ல வருமானத்தைப் பெறுகிறது. தேவயானி கோப்ரகடே விவகாரத்தினால், இருதரப்பு உறவுகளில் முரண்பாடுகள் ஏற்பட்ட போது, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ், இந்த விவகாரத்தினால், ஆசியாவில் அமெரிக்கா ஒரு மிகச் சிறந்த சந்தையை இழந்துவிட முடியாது என்று கூறியிருந்தார். எனவே, அமெரிக்கா பாதுகாப்புக்கு மட்டுமன்றி, தமது வர்த்தக விருத்திக்கும், இந்தியாவினது ஒத்துழைப்பு அவசியமெனக் கருதுகிறது. இப்படிப்பட்ட நிலையில், தமரா குணநாயகம் கூறுவது போன்று, இலங்கையில் தளம் ஒன்றை அமைப்பது மட்டும்தான் அமெரிக்காவினது இலக்கு என்று வரையறுப்பது முடியாத காரியமாகும்.

தளங்களை அமைத்துப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் யுகம் மெல்ல மெல்ல மறைந்து வருகிறது. அதற்காக இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை அமெரிக்கா குறைத்து மதிப்பிடுவதாக கொள்ள முடியாது.

இலங்கையில் தளம் அமைக்க முடியாது போனாலும், தமது நலனுக்கு விரோதமாக அது பயன்படுத்தப்படாது என்று உறுதிப்படுத்திக் கொள்வது அமெரிக்காவின் பாதுகாப்புக் கொள்கையின் ஒரு அம்சமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதைச் சாத்தியப்படுத்திக் கொள்வது ஒன்றும் அவ்வளவு இலகுவானதல்ல. அந்த இலக்கை அடைவதற்கான ஒரு திட்டத்தின் ஒரு பகுதியாக கூட, இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தற்போதைய நகர்வுகளைக் குறிப்பிடலாம்.

அதாவது, இப்போதைய அரசாங்கம், அமெரிக்காவின் நலன்களுக்கு வழிவிடுவதற்கு ஒருபோதும் இணங்கப் போவதில்லை. ஏனென்றால், அது சீனாவின் நிழலில் தங்கியிருக்கிறது.

அதுமட்டுமன்றி, தற்போதைய அரசாங்கத்தின் அணுகுமுறைகளும் கூட, அமெரிக்கா எதிர்பார்க்கின்ற விடயங்களுக்கு முற்றிலும் எதிர்மாறானதாகவே இருக்கிறது. இந்தநிலையில், அமெரிக்காவுக்கு இருக்கின்ற ஒரே தெரிவு, ஆட்சிமாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதேயாகும். தனது நலன்களை பாதுகாப்பதற்கான ஒரு அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதன் மூலம், அமெரிக்காவினால் இதனை அடையலாம்.


உலகில் இத்தகைய எத்தனையோ ஆட்சி மாற்றங்களை அமெரிக்கா நிகழ்த்தியுள்ளது. இலத்தீன் அமெரிக்க நாடுகளில், ஆபிரிக்க நாடுகளில், மத்திய கிழக்கு நாடுகளில், இத்தகைய பல ஆட்சி மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இப்போது, உக்ரைனில் நடப்பதுகூட, அத்தகையதொரு பின்புல முயற்சியாகவே கருதப்படுகிறது.

ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதில் அமெரிக்கா முழுமையாகத் தோல்வியுள்ள நாடு என்றால், அது கியூபா மட்டும் தான். வடகொரியா விடயத்தில், அமெரிக்கா ஆட்சி மாற்றத்தில் அதிக அக்கறை செலுத்தியதாக கொள்ள முடியாது. அண்மைக் காலத்தில் சிரியா அதற்குச் சவாலாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம், எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள அமெரிக்கா நினைக்கலாம்.

சட்டத்தின் ஆட்சி பற்றி இப்போது மேற்குலகினால் அதிகமாகப் பேசப்படுவதைக் கவனிக்கலாம்.

அமெரிக்கா என்றாலும் சரி, பிரித்தானியா என்றாலும் சரி, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை என்றாலும் சரி, சட்டத்தின் ஆட்சி இலங்கையில் இல்லை என்று தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வருகின்றனர். கடந்த வாரம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்ககூட இதைப் பற்றிப் பேசியுள்ளார்.



சட்டத்தின் ஆட்சியை நிறுவுவதன் மூலம், சர்வதேசத் தலையீடுகளில் இருந்து தப்பிக் கொள்ளலாம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். அரசாங்கம் அதைச் செய்தால், அமெரிக்காவுக்கு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, அல்லது தலையீடு செய்வதற்கான ஒரு பிடிமானம் இல்லாமல் போய் விடும் என்பதே அவரது கருத்தாகத் தெரிகிறது.

அதேவேளை, சட்டத்தின் ஆட்சியை, இன்றைய சூழலில் ஆட்சி மாற்றத்துக்கான ஒரு விதையாக கூட கருதலாம். சட்டத்தின் ஆட்சியை மீள நிறுவுவதன் மூலம், இலங்கையில் அமெரிக்கா சுட்டிக்காட்டும் குறைபாடுகள் எல்லாவற்றையும் களைவதற்கான சூழல் உருவாக்கப்படும்.

தற்போதைய அரசாங்கத்தின் அணுகுமுறைகளும்கூட, அமெரிக்கா எதிர்பார்க்கின்ற விடயங்களுக்கு முற்றிலும் எதிர்மாறானதாகவே இருக்கிறது. இந்தநிலையில், அமெரிக்காவுக்கு இருக்கின்ற ஒரே தெரிவு, ஆட்சிமாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதேயாகும். தனது நலன்களை பாதுகாப்பதற்கான ஒரு அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதன் மூலம், அமெரிக்காவினால் இதனை அடையலாம்.

ஜனநாயகம், ஊடக சுதந்திரம், நீதித்துறை சுதந்திரம், ஊழல், மத சுதந்திரம், பொறுப்புக்கூறல் என்று எல்லாவற்றுக்கும் தீர்வு காணும் ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்று கருதக்கூடும்.

இந்த அரசாங்கத்தைக் கொண்டு பொறுபபுக்கூறல், நல்லிணக்கம் என்று, தான் நினைத்த எதையும் அமெரிக்காவினாலோ, சர்வதேச சமூகத்தினாலோ சாதிக்க முடியவில்லை. இதற்கு மேல், பொருளாதாரத் தடை உள்ளிட்ட வழிமுறைகளின் மூலம், இலங்கை மீது அழுத்தங்களைக் கொடுப்பதற்கு சர்வதேச சூழமைவுகள் அவ்வளவாக இடம்கொடுக்கவும் மாட்டாது. அவ்வாறு செய்வதானாலும் கூட, அதை அமெரிக்காவும் மேற்குலகும் மட்டும் தன்னிச்சையாகவே மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

எனவே, தமக்கு வசதியான ஆட்சி ஒன்றை இலங்கையில் நிறுவுவதன் மூலம் அடைய நினைத்த இலக்குகள்ள அடையலாம் என்று அமெரிக்கா சிந்தித்தால் அது ஆச்சரியமானதாக இருக்க முடியாது. அதேவேளை, இந்த விவகாரத்தில் அமெரிக்காவினது தலையீடுகள் முற்றுமுழுதாக தனது நலன் சார்ந்ததாகவே இருக்கும் என்று எதிர்பார்ப்பது சற்று மிகையானதாகவே தோன்றுகிறது.

ஏனென்றால், பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் விட்டுவிட்டு அமெரிககாவினால் இலங்கைக்கு எதிரான நகர்வுகளை முன்னெடுக்க முடியாது. அவைதான், இந்த காய்நகர்த்தல்களின் மையமாக உள்ளன. அதேவேளை, இத்தஙகயதொரு சூழலை அமெரிக்கா உருவாக்கிக் கொளள வில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேணடும்.

இலங்கை அரசாங்கமே அந்த சூழலை உருவாக்கிக் கொடுத்தது.

போர் முடிவுக்கு வந்தவுடன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வாழ்த்துக் கூறிய அமெரிக்கத் தூதுவராக இருந்த றொபேட் ஓ பிளேக், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் இரண்டும் அவசியம் என்று வலியுறுத்தியிருந்தார். அதன் தொடர்ச்சி தான், இன்று ஜெனிவாவில் இலங்கையின் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கிறது.

அப்போது, பிளேக் சொன்னதை அரசாங்கம் தெளிவாகப் புரிந்து செயற்பட்டிருந்தாலோ, அல்லது அதற்குப் பின்னரேனும், அமெரிக்காவின் கருத்துகளை சரியாக செவிமடுத்திருந்தாலோ, பொறுப்புக்கூறலை மையமாக வைத்து, சட்டத்தின் ஆட்சியை மீளநிறுவுதற்கு அமெரிக்காவினால் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போயிருக்கும். அதேவேளை, சட்டத்தின் ஆட்சி இலங்கையில் மீள நிறுவப்பட்டால், அல்லது ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு விட்டால், பொறுப்புக்கூறலை அமெரிக்கா மறந்துபோய் விடும் ,என்ற கருத்தும் உள்ளது.

ஆனால், அவ்வளவு இலகுவாக அமெரிக்காவினால் இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவும் முடியாது. ஏனென்றால், இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா கை வைத்ததே, பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தை மையப்படுத்தித் தான். எனவே, அந்த இலக்கை அடைய வேண்டும் அல்லது அதனை அடைந்து விட்டதாக வேனும் உலகிற்குக் காட்டிக்கொள்ள வேண்டி தேவை அமெரிக்காவுக்கு உள்ளது.


அமெரிக்காவினது மைய இலக்கு எது என்பது இங்கு முக்கியமானதல்ல. அமெரிக்கா தனது இலக்கை அடைய மேற்கொள்ளும் வழிமுறைகளின் ஊடாக, தமிழர் தரப்பு தமது இலக்குகளை அடைய முயற்சித்தலே இப்போது முக்கியமானது. நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் என்ற கருத்தை இங்கு விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழர்கள் நெல்லாக இருந்து அந்த நீரை முழுமையாக அடைய முடியாது போனாலும், புல்லுக்குக் கிடைக்கும் நீரைப் போல, ஒரு பகுதியையேனும அனுபவிக்கும் வாய்ப்புக் கிடைக்கலாம் என்றே தெரிகிறது.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

# 15.03.2014 - 13.04.2014



## கும்பம்

**அவிட்டம்3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**ஒளிவு மறைவின்றிப் பேசி உடனிருப்பவர்களை திருப்திப்படுத்தும் கும்ப இராசிநேயர்களே! நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர்!**

## இம்மாதம் கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிநாதன் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். சகாய ஸ்தானாதிபதி செவ்வாயும் வக்ரம் பெற்றிருக்கிறார். எனவே, தன்னம்பிக்கையும், தைரியமும் குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழிலில் அதிக விழிப்புணர்ச்சி தேவை. கூட்டாளிகள் கூடுதல் லாபத்தைத் தருவதாகச் சொல்லி ஏமாற்றத்தைச் சந்திக்க வைக்கலாம்.

ஆயினும் நீங்கள் செய்த மிகப்பெரிய பாக்கியம் குரு வக்ர நிவர்த்தியாகிவிட்டார். எனவே, அதன் அருட்பார்வை உங்கள் ராசியில் முழுமையாகப் பதிகிறது. துன்பங்களைத் தூளாக்குவதும், துயரங்களை வெளியேற்றுவதும் குருவின் பார்வை பலத்திற்கு உண்டு. எனவே, அப்படிப்பட்ட குருவை நீங்கள் தொடர்ந்து வழிபாடு செய்வதும் சான்றோர்களின், ஆன்றோர்களின் வாழ்த்துக்களைப் பெறுவதன் மூலமும் சந்திக்கும் செயல்கள் எல்லாம் சாதிக்கும் செயல்களாக மாறும்.

வாக்கு ஸ்தானத்தில் சூரியன் பவனி வருவதால் கோபத்தின் காரணமாக சில நல்ல வாய்ப்புகளை ஒருசிலர் இழக்க நேரிடலாம். எனவே கோபத்தைக் குறைத்துக் கொளவது நல்லது. செவ்வாயின் சஞ்சாரம் அஷடமத்தில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. வாகனங்களில் செல்லும் பொழுது கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. பழைய வாகனங்களை கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்குவதிலும் ஒரு சிலர் ஆர்வம் காட்டலாம்.

தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். தொகை வரவில் தடைகள் அதிகரிக்கும். வீடு கட்டும் பணி பாதியில் நிற்கிறதே ஏ்ன்று கவலைப்படுவீர்கள். வேகமான முன்னேற்றமும். இடையில் திடீர் திடீரென தடைகளும் மாறிமாறி வரும் விதத்தில் இம் மாதத்தில் கிரக நிலைகள் சஞ்சரிக்கின்றன. அதற்குப் பரிகாரமாக ஆஞ்சநேயர் வழிபாடும். அங்காரக வழிபாடும் வழிவகுக்கும்.

அருகிலுள்ள சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று சிறப்புப் பரிகாரங்களை செய்து வருவதும் நல்லது. அதேபோல செவ்வாய்க்குரிய ஸ்தலத்திற்குச் சென்று அங்காரக வழிபாட்டை மேற்கொள்வதும் உன்னத வாழ்விற்கு அடித்தளமிடும்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 5, 8-க்கு அதிபதியான புதன் மார்ச் 28ஆம் திகதி மீன ராசியில் நீச்சம் பெறுகிறார். இதன் விளைவாக சில நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். அதே நேரத்தில் புத்திர ஸ்தானாதிபதியாகவும் புதன் விளங்குவதால் பிள்ளைகள் வழியில் தொல்லைகளும் ஏற்படலாம். குழந்தைச் செல்வங்களின் குணங்களில் மாறுபாடுகள் ஏற்பட்டு உங்கள் மனதை நெருடலாம். பிள்ளைகள் வழியில் ஏற்படும் விரயம் தவிர்க்க முடியாததாக அமையும். கல்யாண முயற்சி அல்லது கல்வி முயற்சிக்காக ஒருசிலர் செலவிட நேரிடும். ஒரு சிலர் வீண் விரயங்களைச் சந்திக்க நேரிடும். அதே நேரத்தில் அஷ்டமாதிபதியாகவும் புதன் விளங்குவதால் அது நீச்சம் பெறும் நேரம் விபரீத ராஜயோகம் செயற்படும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

மார்ச் 31ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இது அனுகூலமான நேரமாகும். புதுமனை புகுவிழா முதல் புதிய கடை திறப்பு விழாவரை நடத்தி மகிழக் கூடிய வாய்ப்பு உருவாகும் நேரமிது. இக்கர்லத்தில் பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு புதிய திருப்பங்கள் பலவற்றையும் காண்பீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். பயணங்களால் பலன் கிட்டும். என்ன இருந்தாலும் கிரகங்களின் வக்ர இயக்கங்கள் மாறும்வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. இம்மாதம் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். வெள்ளிக்கிழமை விரதமிருப்பதன் மூலம் நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

இம்மாதம் ராசிநாதன் சனியும், சகாய ஸ்தானாதிபதி செவ்வாயும் வக்ரம் பெற்றிருப்பதால் எதையும் யோசித்துச் செய்ய வேண்டிய நேரமாகவே இருக்கிறது. உடல் ஆரோக்கியத்திலும் அடிக்கடி தொல்லைகள் உருவாகலாம். வாங்கிய இடத்தை விற்று விட்டோமே என்று கவலைப்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி காண இயலும். குடும்பச் சுமை கூடும். கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்வது நல்லது. சனி வழிபாடும், அங்காரக வழிபாடும் சஞ்சலங்களைத் தீர்க்கும்.

# சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**பக்கபலமாக இருப்பவர்களின் சிக்கல்களைத் தீர்க்கப் பாடுபடும் மீன இராசிநேயர்களே! காரிய வெற்றி ஏற்படும் நேரம்!**

## நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழும் நேரமிது

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே ராசிநாதன் குரு வக்ர நிவர்த்தியாகி பூரண பலத்துடன் சஞ்சரிக்கிறார். அதன் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால் இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பும், உழைப்பிற்கேற்ற பலன்கள் உடனுக்குடன் கிடைக்கும் சூழ்நிலையும் உருவாகும்.

11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால் இம்மாதம் நன்மையும், தீமையும் கலந்த பலனையே கொடுப்பார். 12-க்கு அதிபதி வக்ரம் பெறுவதால் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜ யோகம்' என்பதற்கு ஏற்ப நீண்ட நாட்களாக நிறைவேறாத காரியத்தை இப்பொழுது நிறைவேற்றிக் கொடுப்பார். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகி மகிழ்வீர்கள். ஆண்டாண்டு காலமாக இருந்து அனுபவித்து வந்த இடம், பூமி போன்றவற்றை விற்பனையாக்கி அதன் மூலம் வரும் பணத்தை உபயோகப்படுத்திக் கொள்வீர்கள்.

பொருளாதாரத்தை வலுப்படுத்தும் இடமான லாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனி வக்ரம் பெறுவதால் வியாபாரத்தில் திடீர் சரிவும் ஏற்படும். உடனடியாக அதைச் சரி செய்யும் வாய்ப்பும் கைகூடும். என்னயிருந்தாலும் அஷ்டமத்து சனி வக்ரம் பெறும் இந்த நேரம் அபரிமிதமான வளர்ச்சியை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

அதே நேரத்தில் உங்கள் ராசிக்கு 2, 9-க்கு அதிபதியான செவ்வாயும் வக்ரம் பெறுகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் குழப்பங்களும், கூச்சல்களும் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். நம்பிக்கைக்கு உரிய உறவினர்களைக் கூட நம்பிச் செயற்பட முடியாத விதத்தில் சூழ்நிலை அமையும். பாகப் பிரிவினைகள் இழுபறி நிலையில் இருக்கும். உடன்பிறப்புகள் கோபக் கனலோடு பேசுவர். இதுபோன்ற காலங்களில் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமும் ஆதாயம் காணலாம், அமைதியும் ஏற்படலாம்.

என்ன இருந்தாலும் செவ்வாய் வக்ர நிவர்த்தியாகும் வரை வாழ்க்கைத் துணையோடும், உறவினர்களோடும் பகை பாராட்டாமல் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

வரவைக் காட்டிலும் செலவு கூடுதலாக இருக்கும். கூடியவரை இம்மாதம் வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வது நல்லது.

**நீச்ச புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 28ஆம் திகதி உங்கள் ராசியில் புதன் நீச்சம்பெறப் போகிறார். 4, 7-க்கு அதிபதியான புதன் நீச்சம் பெறுவது நன்மை தான். வீடு, இடம் வாங்குவதில் இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். திடீர் இடமாற்றம், ஊர் மாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். உஷ்ண ஆதிக்க நோயில் இருந்து ஒரு சிலர் ஆட்பட நேரிடலாம். உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்தமையும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல்களும், அழைப்புகளும் ஒரு சிலருக்கு வரலாம். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் முடிந்த பின்னால் அவற்றை உபயோகப்படுத்திக் கொள்வது நல்லது.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

மார்ச் 31ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். 3, 8-க்கு அதிபதி 12இல் சஞ்சரிக்கும் இந்த நேரம் ஒரு பொன்னான நேரமாகும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பிறர் நலனில் அதிக கவனம் எடுத்துக் கொள்வதன் விளைவாக ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். வியாபாரப் போட்டிகள் விலகும். புதிய தொழில் மற்றும் ஒப்பந்தங்கள் கூட ஒரு சிலருக்கு வந்து சேரும். இம்மாதம் பிரதோஷ வழிபாட்டை முறையாக மேற்கொள்வதன் மூலம் பெருமைகள் வந்து சேரும். நந்தி வழிபாட்டால் நலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

இம்மாதம் எதையும் யோசித்துச் செய்வதன் மூலமே யோகங்களைப் பெற இயலும். விரயங்கீள் அதிகரிக்கும் விதத்திலேயே கிரகங்களின் சஞ்சார நிலை உள்ளது. பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால் சண்டை, சச்சரவுகளிலிருந்து விடுபட்டு சமரச முயற்சிக்கு வழி வகுத்துக் கொள்வீர்கள். அனுமன் வழிபாட்டை சனிக்கிழமை தோறும் மேற்கொள்வதோடு ராகு கேது பிரீதி செய்வதன் மூலம் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ரீதியான இணக்கப்பாடுகளை முன்னெடுப்பதற்கான காலம் கனிகிறது

## ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

***தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் இணை யும் காலம் கனிகிறது. ஜனநாயக ரீதியான போராட்டங்களின் மூலமாக சகல இனங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சமத்துவமானதும் சாத்தியமானதுமான தீர்வுகளை நோக்கி நகரும் கட்டத்திற்கு எம்மை புடம் போட்டுக் கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.***

நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சரியான விடயத்தை சரியான நேரத்திலேயே செய்தாகவேண்டும். பிழையான நேரத்தில் செய்யும் சரியான விடயமும் பிழையாகப் போய்விடும் என எமது தலைவர் அஷ்ரப் அடிக்கடி கூறுவார்கள். ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைவு என்பது சரியான விடயமாகும். ஆனால் கடந்த காலங்களில் பிழையான நேரமென்பதால் அவ்வாறான பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்குச் செல்லவில்லை.

நாம் கிழக்கு மாகாணத்தில் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்ற முடிவை எடுப்பதற்காக கட்சி மட்டங்களில் சந்திப்புக்களை நடத்திக் கொண்டிருந்தபோது சம்பந்தன் மு.கா. கிழக்கு தேர்தலில் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட வேண்டும்.

இல்லையேல் தனித்துப் போட்டியிட வேண்டும். அவ்வாறில்லாது விட்டால் அது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோக மாக போய்விடும் என காட்டமான கரு த்தை முன் வைத்திருந்தார்.

எனது கட்சி மட்டத்திலும் இது குறித்துப் பலர் வாதங்களை முன் வைத்திருந்தனர். என்னைப் பொறுத்தவரையில் அன்று நாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்திருந்தால் ஆட்சியமைத் திருக்கலாம்.

இருப்பினும் நாம் எடுத்த முடிவில் தூரநோக்கமொன்றிருந்ததை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

தற்போது சர்வதேசம் பலவிடயங்களை கூறியிருக்கும் போதும் அதனை நடைமுறைப்படுத்துவதில் அரசு தாமதப்படுத்துகின்ற நிலையில் கிழக்கு மாகாணத்தில் மு.கா தனித்துப் போட்டியிட்டிருந்தால் அரசுக்கு வடமாகாணத்தை நடத்தும் துணிவு சிறிதளவிலும் வந்திருக்காது. அரசியலைப் பொறுத்தவரையில் ஆட்களை பறிப்ப தென்பது அவ்வளவு கடினமான விடயமல்ல என்பதை அனைவரும் சூட்சுமமாக அறிவார்கள்.

மு.கா எடுக்கும் முடிவுகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்ப தையும் சிந்திக்க வேண்டும். பல விடயங்களை துணிகரமாக பேசுவதற்கு சந்தர்ப்பம் வரும்வரை காத்திருக்க வேண்டியுள்ளது. அதன் அடிப்படையிலும் பட்டறிவைக் கொண்டவன் என்பதன் அடிப்படையிலும் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் செயற்படுபவன் என்பதன் அடிப்படையிலும் முடிவுகளை எடுக்க வேண்டியேற்பட்டது.

தமிழ், முஸ்லிம் சமூகங்களை தமிழ் பேசும் சமூகம் என்பதன் அடிப்படையில் எமது வருங்கால நகர்வுகள் அதற்கான சரியான சூழலில் அமையும் காலம் வெகு தொலைவில் இல்லையென்பதை சிவசிதம்பரத்தின் நினைவுப் பேருரையில் அன்றைய தினம் தெரிவித்திருந்தேன்.

தற்போது எம்மைச்சூழ நடக்கும் விடயங்களை பார்க்கும் போது அதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்பது தெளிவாகத் தெரின்றது.

தெற்கில் இருப்பவர்களுடன் முட்டி மோதிக்கொண்டு நாம் எமது நிலைப்பாடுகளை நிலை நிறுத்துவதற்கு போராடுவதைவிடவும் புரிந்துணர்வுடன் சிலவிடயங்களை சாதிப்பதற்கு ஆர்வம் காட்ட வேண்டும்.

யுத்தத்திற்கு பின்னரான சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அதனை சாத்தியப்படுத்துவது குறித்து பரந்துபட்ட அறிவை வளர்க்கக் கூடிய நிலைமைகளை ஏற்படுத்தவேண்டும்.

தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற நிலையில் தீவிரமானவர்கள் இருதரப்பிலும் இருக்கின்ற நிலையில் நடுநிலையான தீர்வினை எடுப்பதற்கு எமது நிலைப்பாடுகளில் வெற்றி பெறுவதற்கு கடினமாக இருக்கின்ற போதும் அரசியல் ரீதியான இணக்கப்பாடுகளை முன்னெடுப்பதற்கான காலம் கனிந்து வருகின்றது என்பதில் நான் நம்பிக்கையோடு இருக்கின்றேன் என்றார். (2)

## சர்வதேசத்தின் சவால்களை எதிர்கொள்ளத் தயார்-கெஹலிய

(கொழும்பு)

சர்வதேச சமூகத்தின் இரட்டை நிலைப்பாடு அம்பலமாகியுள்ளது என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஜெனீவா மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளின் போது சர்வதேச சமூகத்தின் இரட்டை நிலைப்பாடு அம்பலமாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின் லேடனை சர்வதேச சமூகம் எவ்வாறு நோக்குகின்றதோ அதேபோன்றே, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் நோக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அண்மையில் ஜெனீவாவில் போராட்டம் நடத்தப்பட்ட போது எவரும் எதிர்க்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் போராட்டத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படங்கள் ஏந்தப்பட்டிருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று ஒசாமா பின் லேடனின் படங்களை ஏந்தி போராட்டம் நடத்தியிருந்தால் எதிர்ப்பு எழுந்திருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப பேரவையின் எந்தவொரு சவாலையும் எதிர்நோக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தை எதிர்நோக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (2)



யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற போது... (படம் : மானிப்பாய் செய்தியாளர்)

## நாட்டையும் மக்களையும் காட்டிக்கொடுக்கும் த.தே.கூட்டமைப்பை கைது செய்ய வேண்டும்

### குணதாச அமரசேகர தெரிவிப்பு

(கொழும்பு).

சம்பந்தனின் சூழ்ச்சியில் இலங்கை சிக்கி விட்டது. சர்வதேச விசாரணையினை கோரும் செயற்பாட்டில் தமிழ்தேசியக்கூட்டமைப்பு வெற்றி கண்டுள்ளது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

ஜெனீவா மனிதவுரிமை பேரவையில் சர்வதேச நாடுகளின் பிரேரணைகள் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்தின் தவறினை சரி செய்யும் வரையில் நாட்டில் சிக்கல் நிலையே தொடரும். தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை கைது செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

இலங்கை மீது சர்வதேச விசாரணைகளை நடத்த வேண்டும் என்பதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் நோக்கமாகும்.

தனி தமிழ் ஈழத்தினை உருவாக்க கூட்டமைப்பு செய்து வரும் சூழ்ச்சி வலையில் இலங்கை அரசாங்கமும் மக்களும் சிக்கி விட்டனர். இலங்கைக்கு எதிராக சர்வதேசத்தினை திருப்பி இலங்கை மீது சர்வதேச விசாரணைகளை ஏற்படுத்தும் செயற்பாட்டில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி கண்டு வருகின்றது.

இலங்கையில்வாழ்ந்து கொண்டு இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் பேசும் கூட்டமைப்பு உறுப்பினர்களை அரசாங்கம் கைது செய்ய வேண்டும். இது தேசத்துரோக செயற்பாடென தெரிந்தும் அரசாங்கம் கூட்டமைப்பினை விட்டு வைப்பதானது நாட்டில் மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

யுத்தம் தொடங்குவதற்கும் வடக்கில் விடுதலைப் புலிகளை உருவாக்குவதற்கும் ஆதரவாக இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை அரசாங்கம் ஏன் இன்னமும் தடை செய்யாதுள்ளது. யுத்தம் முடிவடைந்த பின்னர் நாட்டில் சமாதானம் ஏற்படுவதை தடுக்கும் வகையில் உள்நாட்டிலும் சர்வதேசத்தின் மத்தியிலும் குழப்பத்தினை ஏற்படுத்தி அரசாங்கத்தினையும் இராணுவத்தினையும் குற்றவாளிகளாக்கும் முயற்சியே நடைபெறுகின்றது.

எனவே நாட்டினையும் மக்களையும் சர்வதேசத்திடம் காட்டிக் கொடுத்து சர்வதேசத்தினை இலங்கைக்குள் கொண்டு வர முயற்சிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை கைது செய்வதோடு உடனடியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை தடை செய்ய வேண்டும எனவும் அவர் தெரிவித்தார். (2)

## மரண தண்டனை கைதிகள் குறித்து ஆராய விசேட ஆணைக்குழு

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் ஆராய்வதற்குவிசேட ஆணைக்குழுஒன்றை ஜனாதிபதி நிறுவியுள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 480 பேர் தொடர்பில் இந்த ஆணைக்குழு ஆராயவுள்ளது.

மரண தண்டனைக் கைதிகள் அடிக்கடி சிறைச்சாலை கூரையின் மீது ஏறி, தண்டனை விதிக்கப்பட வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டுமென கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவை செயலாளர்கள், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரி, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதவான்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மருத்துவர்கள் உள்ளிட்டவர்கள் இந்த ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட முறைமை உள்ளிட்ட ஏனைய பல காரணிகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய உயர்ஸ்தானிகர் கட்டளைத்தளபதி சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் திருமதி செலீ விடின். பாதுகாப்புப்படை கட்டளைத்தலைமையகத்தில் வைத்து கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவை சந்தித்துள்ளார்.

தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் பற்றி அறிந்து கொள்வதே உயர்ஸ்தானிகரின் விஜயத்தின் நோக்கமாக அமைந்திருந்தது.

இச்சந்திப்பின் போது பாதுகாப்பு நிலைமைகள் பற்றி தெளிவுபடுத்திய கட்டளைத் தளபதி. குடாநாட்டில் நிலவும் சமாதானத்தை இல்லாமலாக்க சிலர் முயற்சிப்பதாக கூறினார். தமிழ் டயஸ்போராவின் சில பிரிவுகள் புலிகளுக்கு மீள் இணைவை மேற்கொள்வதற்காக சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு செயற்படுவதாகவும். அது பற்றி பாதுகாப்புப் படையினர் விழிப்புடன் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேவையான சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்டவர்களின் வேண்டுகோளுக்கமைய பொது மக்களுக்கு. சிவில் அமைப்புகளுக்கு மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்க இராணுவம் ஆயத்தமாக இருப்பதாக அவர் தொடர்ந்தும் தெரிவித்தார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



திருமதி
**அருளானந்தம் திரேசம்மா**

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் திரேசம்மா கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புனித யுவானியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



**செல்லையா ஆறுமுகம்**

கொடிகாமம் பளை நாவற்காட்டைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா ஆறுமுகம் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் 24 ஆம் திகதி திங்கட்கிழமை Maison Funeraire, De Paris, 7 Boulevard du Menilmontant, 75011, France என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



திருமதி **செல்லமுத்து கணகி**

கலாசாலை வீதி, பாரதிபுரம் திருநெல்வேலியை சேர்ந்த செல்லமுத்து கணகி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றது.

# நாட்டின் ஆட்சியாளர்கள் அமெரிக்காவுக்கு சார்பானவர்கள் - விக்ரமபாகு கருணாரட்ன

**(கொழும்பு) நாட்டின் ஆட்சியாளர் அமெரிக்காவுக்கு சார்பானவர்கள். கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவின் கிறீன் அட்டையை பெற்றவர். இவர் இலங்கை மக்களிடம் சம்பளத்தை பெற்றுக் கொண்டு அரசியல் மேடைகளில் வேண்டாதவற்றை பேசி வருகிறார் என நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

இனப்பிரச்சினையை தீர்க்க மஹிந்தவுக்கு இட்மளிக்க போவதில்லை என அரசாங்கத்தில் உள்ள சிலர் கூறுகின்றனர்.

டியூ.குணசேகர. திஸ்ஸ விதாரண. ராஜித சேனாரட்ன. நவின் திஸாநாயக்க உட்பட சிலரை இணைத்து கொண்டு வாசுதேவ நாணயக்கார முன்னெடுக்கும் நடவடிக்கை தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

நாட்டின் ஆட்சியாளர்கள் அமெரிக்காவுக்கு சார்பானவர்கள். கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவின் கிறீன் அட்டையை பெற்றவர். இவர் இலங்கை மக்களிடம் சம்பளத்தை பெற்றுக்கொண்டு அரசியல் மேடைகளில் வேண்டாதவற்றை பேசி வருகிறார்.

இலங்கையின் தேர்தல் சட்டங்களுக்கு அமைச்சர். அமைச்சின் செயலாளர்கள் தேர்தலில் பங்கு பெறக்கூடாது. எனினும் கோத்தபாய தேர்தல் பிரசார மேடையில் ஏறினார்.

இதன் பின்னர். தேர்தல் பிரசாரங்களில் பங்கேற்க கூடாது என்று சகல செயலாளர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் கூறினார். இந்த சுற்றறிக்கையை கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளை சிலர் விமர்சித்து வருகின்றனர். அந்த கூட்டத்துடன் சுசில் பிரேமஜயந்தவும் இணைந்துள்ளார்.

நாட்டின் தலைவரை மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்ல இடமளிக்க போவதில்லை என பிரேமஜயந்த கூறினாலும். இவர்கள் அனைவரும் அமெரிக்காவுக்கு சார்பானவர்கள்.

இப்படியானவர்களை எவரும் மின்சார நாற்காலியில் அமர்த்துவார்களா? இவர்கள் மேற்குலக சக்திகளுடன் பொருளாதார உடன்படிக்கைகள் உட்பட பல உடன்படிக்கைகளை செய்துள்ளனர்.

இவ்வாறான நிலையில். இலங்கையில் ஜனநாயகம் இல்லை என்றே அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் கூறுகின்றன என விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். (2)

# எதிர்க்கட்சிகள் அதிசயமானவர்கள்

பசில் தெரிவிப்பு



(கம்பஹா)

இந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் தேர்தலுக்கு அஞ்சி வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்குபற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்.

உலகின் ஏனைய நாடுகளில் எதிர்க்கட்சிகள் தேர்தலை நடத்துமாறு கோரி வருகின்ற போதிலும். இலங்கையில் எதிர்க்கட்சிகள் தேர்தலை விரும்பவில்லை. மிகவும் அதிசயமான எதிர்க்கட்சிகள்.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியிடம் தோல்வியடைந்த போது. கவலையடைந்திருக்கின்றோம். எனினும். இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியை பார்த்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களே மகிழ்ச்சி அடைகின்றனர்.

இந்த தலைவரை விரட்டியடிக்க வேண்டுமென முயற்சிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# நாட்டில் எது நடந்தாலும் ஜெனீவாவை தொடர்புபடுத்துகின்றனர் - ரில்வின் சில்வா

(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அரசாங்க ஊடகப் பேச்சாளராக மாறியுள்ளார் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்று வரும் சகல பிரச்சினைகளுக்கும் ஜெனீவாவை தொடர்புபடுத்தி அரசியல் நடத்தப்படுகின்றது.

ரதுபஸ்வல பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவத்திற்கு நிகரான சம்பவமே ஹங்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குமாறு மக்கள் பல தடவைகள் அரசாங்கத்திடம் கோரியிருந்தனர்.

அரசாங்கம் செவிட்டு யானைகளைப் போன்று பேசாமல் இருந்தது. அமைதியாக நடத்தப்பட்ட போராட்டத்தின் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பெண்கள்.சிறுவர்கள் மீது கடுமையான தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதலுக்கு எதிராக பிரதேச மக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பொலிஸார் பிரதேச மக்களின் பிரச்சினைகளுக்கு செவி சாய்க்காது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

தப்பிக்க விஹாரைக்கு சென்றவர்கள் மீது பௌர்ணமி தினம் என்று கருதாது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நாட்டில் இப்போது எது நடந்தாலும் அதற்கு ஜெனீவாவை தொடர்புபடுத்திக் கொள்கின்றனர். இவ்வாறு பொலிஸார் பொய் சொல்லத் தொடங்கினால். மக்கள் வைத்திருக்கும் கொஞ்ச நம்பிக்கையும் இல்லாமல் போய்விடும்.

ஹங்வெல்ல மக்கள் நாட்டை காப்பாற்றிய ஜனாதிபதியே. எங்களது கிராமத்தை பாதுகாத்துத் தாருங்கள் என கோரியிருந்தனர்.

அரசாங்கத்தினதோ அல்லது பொலிஸ் ஊடகப் பேச்சாளரினதோ பொய்யான குற்றச்சாட்டுக்களை ஜே.வி.பி ஏற்காது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்த சம்பவம் தொடர்பில் கற்பனை கதைகளை வெளியிட்டு வருகின்றார் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்களுக்கு நியாயம் கிட்டும் வரையில் போராட்டங்கள் தொடரும் என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (2)

# விளையாட்டுப்போட்டிகளில் தேர்தல் பிரசாரங்கள்

PAFFREL
PEOPLE'S ACTION FOR FREE AND FAIR ELECTIONS

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்துக்காக விளையாட்டுப் போட்டிகளை பயன்படுத்தும் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு உள்ளிட்ட மேல் மற்றும் தென் மாகாணங்களில் தற்போது அரசாங்க தரப்பினரால் பரவலாக விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவை தேர்தல் பிரசாரங்களை நடத்தும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந் நிலையில் இவற்றை தடுத்து நிறுத்த் தேர்தல்கள் திணைக்களம் முன்வர வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண சபையில்

# சட்டவிரோத கைது நடவடிக்கைகளை கண்டித்து இன்றைய அமர்வில் ஆளும்தரப்பு கடும் கண்டனம்

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட பாலேந்திரன் ஜெயக்குமாரி மற்றும் அவரது 13 வயதேயான மகள் விபூசிகாவின் கைதுக்கு வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் கடும் கண்டனத்தை வெளியிட ஆளும்கட்சியான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் முடிவெடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனைவிட இந்த அமர்வில் வாய்மொழிப்பிரேரணைகள் உள்ளடங்கலாக 20 பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று நடைபெறும் இவ்வமர்வில் மக்கள் மீள் குடியேற்றப்பட்ட பின்பும் நடத்தப்படாமலுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் உள்ளிட்ட 15 பிரேரணைகள் சபையில் விவாதத்திற்கென சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் 7 ஆவது அமர்வு இன்று காலை 9.30 மணிக்கு. கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்த அமர்வில் முதன்முறையாக சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 6 மாதங்களின் பின்னர் நியதிச் சட்டங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அத்துடன் 7 உறுப்பினர்களால் 15 தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அந்தப்பிரேரணைகள் இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது. இதில் முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பி னரும் பிரதி அவைத்தலைவரு மான அன்ரன் ஜெகநாதனால் சமர்ப் பிக்கப்பட்டுள்ள பிரேரணையில் முள்ளிவாய்க்கால் மீள்குடியமர்வு நடைபெறவில்லை என்பதற்காக இடைநிறுத்தி வைக்கப்பட்ட கரை துறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்குரிய தேர் தல்களை நடத்த வேண்டும் என வலியுறுத்தி பிரேரணை முன்மொழியப்பட்டுள்ளது.

இதனைவிட புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட பெரிய கைவேலி யிலிருநது விசுவமடு மஞ்சள் பாலம் வரையிலான பரந்த விவசாய பூமியின் மையமான உடையார் கட்டில் மக்கள் வங்கியின் பிராந்தியக் கிளையை திறக்குமாறு கோருதல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகர்னால் முன்மொழியப்பட்டுள்ள பிரேணையில், வள்ளி புனத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் தும்புத் தொழிற்சாலை அமைத்தல், நன்னீர் மீன்பிடித்தொழில் அபிவிருத்திக்காக வட்டுவாகல், நந்திக் கடல் எல்லைக்குட்பட்ட பகுதியை ஆழமாக்கல், ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட குமிழமுனை மகாவித்தியாலயம் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் ஆராயப்படுவதுடன் மீளவும் இணைக்கப்படுதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட மாகாண சபை உறுப்பினர் ஞா.குணசீலனால் முன்மொழியப்பட்டுள்ள பிரேரணையில், வவுனியா மாவட்ட வைத்தியசாலையை மாகாண வைத்தியசாலையாக தரமுயர்த்துதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசாவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரேரணையில், வவுனியா மாவடடம வெண்கலச் செட்டிக்குளம் பிரதேசத்தில் பாவற்குளம் யுனிற்றில் அமைந்துள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்த எடுத்துள்ள முயற்சியை நிறுத்தக் கோருவதாகக குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட மாகாண சபை உறுப்பினர் அ.அஸ்மினால் முன்மொழியப்பட்டுள்ள பிரேரணையில், வடக்கில் போரின் பின்னரான சமூக சீர்கேடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொக்கிளாய் கடல் நீரேரியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், முறைகள் பயன்படுத்துவதை முழுவதுமாக தடை செய்தல், இதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மாகாண சபை உறுப்பினர் சோமசுந்தரம் முன்மொழியப்பட்டுள்ள பிரேரணையில், ஏனைய மாகாணங்களில வழங்கப்பட்ட உயர்தேசிய டிப்ளோமா பட்டதாரி நியமனத்தை வடக்கிலும் வழங்குதல் வேண்டும் .

வடக்கு பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள ஆய்வுகூட உதவியாளர், நூலகருக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவுகளை வெளியிடல் வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையினால் முன்மொழியப்பட்டுள்ள பிரேரணையில், பூநகரியில் உவர் நீர் தடுப்பணை அமைத்தல்.


மாகாண சபைக்குரிய கிளிநொச்சி மாவட்ட செயலக கட்டடத்தை, மாவட்டச் செயலகம் புதிய இடத்திற்குச் சென்ற பின்னர், குறித்த கட்டடத்தின் பிரதான மண்டபத்தை கிளிநொச்சி மாவட்ட மத்திய நூல் நிலையத்திற்கு வழங்குதல், இரணை தீவிலருந்து வெளியேறிய குடும்பங்களை மீளவும்குடியமர்த்தி, அவர்கள முன்னர் செய்த தொழில்களை தடையின்றி தொடர வழி வகுத்தல், கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவகத்தை மாகாணசபை பொறுப்பெடுத்தல் போன்ற பிரேரணைகள் முன்மொழியப்பட்டள்ளன. இந்தப்பிரேரணைகள் இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.


இதேவேளை, கிளிநொச்சி தர்மபுரம் முசலிம்பிட்டி வீட்டுத்திட்டத்தல் வாழ்ந்து வரும் குடும்பத்தை சேர்ந்த பாலேந்திரன் ஜெயக்குமாரி மற்றும் அவரது மகள் ஆகியோர் கடந்த 13 ஆம் திகதி இராணுவத்தி னரின் சுற்றிவளைப்பின் பின்னர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு தற்போது பூசா தடுப்பு முகாமில் ஜெயக்குமாரி தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அதேவேளை, அவரது மகளான விபூசிகா சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளாள்.

இந்நிலையில் இவர்களின் கைது நடவடிக்கைக்கு தமது கடுமையான எதிர்ப்பினை மாகாண சபையின் இன்றைய அமர்வில் வெளியிட ஆளும்தரப்பு உறுப்பினர்கள் முடிவெடுத்துள்ளனர்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தாயையும் மகளையும் உடனடி யாக விடுதலைசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அராசங்கததிடம் வலியுறுத்தும் தீர்மானமும் மாகாண சபையின் அமர்வில் உறுப்பினர்களினால் கொண்டுவரப்படவுள்ளது.

அதுமட்டுமின்றி போர்க் காலத்தில் வடக்கில் காணாமற் போனவர்களைத் தேடும் உறவுகளை அச்சுறுத்தும் வகையில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத கைது நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறும் இன்று நடைபெறும் வடக்கு மாகாண சபையின் 7 ஆவது அமர்வல் வலியுறுத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)





யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியில் திடீரென தடம்புரண்டு ஆட்டோ விபத்துக்குள்ளானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஆனைக்கோட்டை மடத்தடிப்பகுதியில் மானிப்பாய் வீதியில் இடம்பெற்றுள்ளது. மானிப்பாய் வீதி அகலிப்பு பணி இடம்பெற்று வருவதனால் வீதியின் மருங்கில் ஏற்பட்டிருந்த பாரிய பள்ளத்தினுள் ஆட்டோவின் சில்லு அகப்பட்டதனால் இந்த விபத்து ஏற்பட்டது. இதில் ஆட்டோ சாரதி சிறுகாயங்களுக்குள்ளாகியிருந்தார். இருப்பினும் ஆட்டோவின் கண்ணாடிகள் உடைந்து வீதியில் சிதறுண்டு கிடந்ததோடு ஆட்டோவும் பலத்த சேதங்களுக்குள்ளாகியிருந்தது. (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

# ஆபாசப்பட இறுவெட்டுக்களை விற்பனை செய்த இரு கடை உரிமையாளர்கள் கைது

ஆபாசப்பட இறுவெட்டுக்களை விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு கடைகளின் உரிமையாளர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் றொகான் டயஸ் தெரிவித்தார்.

குறித்த இரண்டு கடை உரிமையாளர்களும் 18 வயதுக்கு குறைந்தவர்களுக்கு இந்த ஆபாசப்பட இறுவெட்டுக்களை விற்பனை செய்து வந்தமை விசாரணைகள் மூலம் அறியப்பட்டுள்ளது

யாழ். மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ். நகரில் மேற்படி இரண்டு கடைகளும் நேற்று நண்பகல் பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள "பொருளியல் கல்லூரி"க்கு அண்மையிலும் கன்னாதிட்டி "சயன்ஸ கோல்" ஆகிய தனியார் கல்வி நிலையங்களுக்கு அண்மையிலும் உள்ள கடைகளிலேயே குறித்த ஆபாசப்படங்கள் விற்பனை செய்யப்பட்டன.

எனினும் தகவலை அடுத்து பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொகான் டயஸ் பணிப்புரைக்கு அமைய குறித்த கடைகளுக்குச் சென்ற பொலிஸார் தேடுதல் நடத்தியதில் 120 இற்கும் மேற்பட்ட இறுவெட்டுக்களை பறிமுதல் செய்துள்ளனர்.

இந்த இறுவெட்டுக்கள் ஒன்று 100 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதுடன் நீண்டகாலமாக விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் இந்தியாவிலிருந்து இவை கொண்டுவரப் பட்டுள்ளதாகவும் விசாரணையி லிருந்து தெரியவருவதாக அவர் கூறினார்.

மேலும் இது போன்ற கடைகள் பல யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி கடைகள் இரண்டின் உரிமையாளர்களுக்கு ஏற்கனவே பலமுறை அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் அவர்கள் தங்களை த்திருத்திக்கொள்ளாமல் பணத்தை உழைப்பதில் ஆர்வம் காட்டியதாகவும் இதுதொடர்பில் தமிழ்த்தேசியப் பண் பாட்டுப் பேரவையினால் யாழ்.பிராந்திய பொலிஸ்மா அதிப ரிடம் நேரடியாக முறைப்பாடு தெரி விக்கப்பட்டதையடுத்தே குறித்த இரண்டு கடைகளும் பொலிஸா ரினால் முற்றுகையிடப்பட்டதாக அந்தப்பேரவையின் தலைவர் எஸ்.நிசாந்தன் தெரிவித்தார்.

இதனைவிட யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தையும் இளைய தலைமுறையையும் திட்டமிட்டு சீரழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் சமூகவிரோதக்கும்பல்களை சட்டத்தின் முன்நிறுத்தும் நடவடிக்கையில் தமது அமைப்பு தொடர்ந்து ஈடுபடும் எனவும் அவர் தெரிவித்தார். (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக்காலத்திலும் பலவீனங்கள் உங்கள் மனதை வெல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்
-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இது பழைய பயமா அல்லது புதிய பயமுறுத்தலா?

வட பகுதியில் படையினரின் இருப்பு எதற்கானது என்ற கேள்விக்கு இலங்கை அரசு கூறுகின்ற பதில் நாட்டை காப்பதற்கானது என்பதாகும்.

ஆனால் உண்மைநிலை நாட்டைக் காத்தல் என்பதற்கப்பால், தமிழ் மக்களை அதட்டுதல் அல்லது சதா அச்சுறுத்தல் என்பதாகவே நிலைமை உள்ளது.

நாட்டை காத்தல் என்பது தனித்து சிங்கள மக்களை காப்பதாகப் பொருள்படாது. மாறாக தமிழ் மக்களையும் பாதுகாத்தல் என்பதாக இருக்கும்.

இலங்கை அரசு கூறுவதுபோல நாட்டைக் காத்தல் என்பதற்காக வட பகுதியில் படையினர் தங்கியிருந்தால், வட பகுதியில் கொலை, கொள்ளை, ஆலயங்களில் நடக்கும் திருட்டு என்பன முற்றாக இல்லாது போயிருக்கும்.

வட பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் படைத்தரப்பு குற்றவாளிகள் எவரையேனும் கைது செய்ததாக அல்லது அத்த கையவர்களை கைது செய்வதற்காக சுற்றிவளைத்ததான சம்பவங்கள் எதுவுமில்லை.

திருட்டுச் சம்பவங்களின்போது குற்றவாளிகளைக் கைது செய்வது பொலிஸாரின் பொறுப்பு என்று கூறி இராணுவத்தினர் மௌனமாக இருந்த இடங்கள் ஏராளம்.

நிலைமை இதுவாக இருக்கையில், கிளிநொச்சி தர்மபுரத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்னதாக இராணுவம் சுற்றிவளைத்து தாயையும் மகளையும் கைது செய்த சம்பவம் தமிழ் மக்களை மீளவும் பயப்பீதிக்கு ஆளாக்கியுள்ளது.

தாயையும் மகளையும் கைது செய்வதற்காக இத்துணை ஏற்பாடுகள்- சுற்றிவளைப்புகள் தேவைதானா? என்ற கேள்வி இவ்விடத்தில் முக்கியமானது.

தான் பெற்ற ஆண் மகனை வன்னி யுத்தத்தில் பறிகொடுத்த தாய் தனது பெண் பிள்ளையுடன் வாழ்வது கூட இந்த மண்ணில் நடவாத காரியம் என்பது மேற்குறித்த சம்பவத்தின் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது.

குறித்த தாய் கைது செய்யப்பட்டமைக்கு பொலிஸ் தரப்பால் கூறப்படும் காரணம் வேறாக இருந்தாலும் குறித்த தாய், வன்னி யுத்தத்தின் போது காணாமல் போன தனது பிள்ளை தொடர்பில் சாட்சியப்படுத்த முற்பட்டமைக்காகவே கைது செய்யப்பட்டார் என்ற கருத்துக்களும் உண்டு.

பொலிஸார் கூறுவது போல பயங்கரவாதத்துடன் தொடர்புடைய நபரை பாதுகாத்தமைக்காகவே அவர் கைது செய்யப்பட்டார் என்றால், அதற்கு இந்தளவுதூரம் சுற்றிவளைப்பு தேவையா? என்ற கேள்வி ஏற்படுவது நியாயமானதே.

இவை யாவற்றிற்கும் மேலாக, சனல் 4 தொலைக்காட்சி காண்பித்த கொலைக்களம், அதில் வெளியிடப்பட்ட ஆதாரங்கள் என்பன எங்ஙனம் சனல் 4க்கு கிடைத்தது?

இவற்றை கொடுத்தது யார் என்ற தேடல்களை இலங்கை அரசு இதுவரை செய்யாதது ஏன்? குறித்த காணொளிக் காட்சிளை படைத்தரப்பினரே சனல் 4க்கு கொடுத்தனர் என்றால் குறித்த படையினரை கைது செய்ய வேண்டும்.

அவ்வாறு கைது செய்ய முடியாத அளவில் அவர்கள் வெளிநாட்டிற்கு தப்பிவிட்டனர் என்றால், தப்பித்து போனவர்களின் தந்தையர், தாய்மார், சகோதரர்கள், உறவுகளை விசாரணைக்குட்படுத்த வேண்டுமல்லவா?

அவ்வாறான விசாரணைக்காக தென் பகுதியில் உள்ள அவர்களது வீடுகள் சுற்றி வளைக்கப்பட்டு உறவினர்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டுமல்லவா? அவை எதுவும் நடைபெறாத போது வன்னியில் தாயையும் மகளையும் கைது செய்ய ஏகப்பட்ட இராணுவம் சுற்றிவளைத்து நிற்பது பழைய பயத்திலா? அல்லது புதிய பயமுறுத்தலா? என்பதை உரியவர்கள்தாம் சொல்ல வேண்டும்.

# யாழ். பெருந்துடுப்பாட்டத்தில் அசம்பாவிதம்; காரணமானவர்களை கைது செய்யுங்கள்

## வலியுறுத்துகிறார் அங்கஜன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பெருந்துடுப்பாட்ட போட்டிகளின் போதான அசம்பாவிதங்களுக்கு காரணமானவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் வட மாகாண சபை உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

யாழ்ப்பாண கல்லூரி – யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி – யாழ்.பரியோவான் கல்லூரி ஆகியவற்றுக்கிடையில் நடைபெற்ற பெருந்துடுப்பாட்ட போட்டியின் போது இடம்பெற்ற அசம்பாவிதங்கள் யாழ்ப்பாண இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துவரும் சீர்கேடான செயற்பாடுகளை வெளிச்சம் போட்டு காட்டும் வகையில் அமைந்திருக்கிறது. இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிப்பது எதிர்காலத்தில் யாழ்ப்பாண சமூகத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் ஆபத்தினைக் கொண்டிருக்கிறது.

ஒருபாதாளக் குழுக்களின் பாணியில் இளைஞர்கள் மாறிவருவதனை அவதானிக்க முடிகின்றது. இதனை உடனடியாகத் தடுக்க வேண்டும்.

இந்த இரண்டு அசம்பாவிதங்களுக்கும் காரணமானவர்களை சரியாக இனங் கண்டு கைது செய்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்.மாவட்ட பொலிஸாரினை நான் வேண்டிக் கொள்கிறேன். இது தொடர்பில் பொலிஸ் மா அதிபருடனும் நான் பேசவிருக்கிறேன்.

இவற்றுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதன் மூலமே எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறாமல் தடுக்க முடியும்.

விளையாட்டில் வெற்றி தோல்வி சகஜம் என்று புரிந்து கொள்ள முடியாமல் உள்ளதாலேயே அடாவடித்தனங்களும் வன்முறைகளும் தலைதூக்குகின்றன. எனவே இத்தகைய சீர்கேடான நடவடிக்கைகளை முளையிலேயே கிள்ளி எறிதல் வேண்டும்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பழைய மாணவர்கள் சங்கத்தினர் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என அங்கஜன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ)

# ஊர்காவற்றுறை இறங்குதுறையை டக்ளஸ் நேரில் சென்று ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை இறங்குதுறையின் புனரமைப்புப் பணிகள் தொடர்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

ஊர்காவற்றுறைக்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி விடயம் தொடர்பாக ஆராய்ந்தார்.

இதன்போது இறங்குதுறைப் பகுதியில் மீளப் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சேதமடைந்த இந்திய ரோலர் படகுகளை அப்பகுதியிலிருந்து அகற்றுவது மற்றும் அப்பகுதியில் மூழ்கியுள்ளதும் சேதமடைந்துள்ளதுமான படகுப் பாதைகளை அங்கிருந்து அகற்றுவது போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்திய அமைச்சர் விசேட அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து அவற்றை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்று தெரிவித்தார்.

அத்துடன் தற்போது பாவனையிலுள்ள படகுப் பாதையின் பயன்பாடுகள் மற்றும் அதன் புனரமைப்பு தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

இதனிடையே ஊர்காவற்றுறை நீதிமன்றத்திற்கு அருகாமையில் பொலிஸ் நிலையத்திற்கென ஒதுக்கப்பட்ட காணியை பார்வையிட்ட அமைச்சர் அதுவிடயம் தொடர்பிலும் கவனம் செலுத்தியிருந்தார். (2)

# கட்டடத்திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மீள்புனரமைப்பு செய்யப்பட்ட யாழ்.மாநகரசபை ஆணையாளர் அலுவலக கட்டடத்திறப்பு விழா இன்று காலை 11 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. (2)

# மாணவர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீடத்தில் உள்வாரியாக மற்றும் வெளிவாரியாக பட்டம் பெற்று வெளியேறிய வெளிமாவட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே வெளிமாவட்ட உள்வாரி வெளிவாரி பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு குறித்த பழைய மாணவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (2-9)

# விவசாயம் மற்றும் தொழில்நுட்பம் பாடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்குக

## பெற்றோர் வலியுறுத்து

(முல்லைத்தீவு)

அளம்பில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திற்கு விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களிற்கு நிரந்தர ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென பெற்றோர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இப்பாடசாலை மீள் குடியேற்றத்தின் பின்னர் 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி முதல் இயங்கி வருகின்றது. இங்கு தரம் ஒன்று முதல் க.பொ.த உயர்தரம் வரையும் 387 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் தொகுதிப் பாடங்களான விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இன்மையினால் மாணவர்களின் அடைவு மட்டத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அத்தோடு தகவல் தொழில்நுட்ப பாடத்தினை கற்பதற்கு ஏதுவாக பாடசாலையில் 9 கணனிகளும் மின்சாரமும் வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் ஆசிரியர்களின்மையால் அவ்வளங்களை மாணவர்களின் பயன்படுத்த முடியாத நிலைக்குட்பட்டுள்ளனர்.

எனவே முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனை இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து நிரந்தர ஆசிரியர்களை நியமிக்குமாறு பெற்றோர்கள் வலியுறுத்தியுள்ளனர். (2-9-267)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## தெய்வநிலைக்கு உயருங்கள்



✠ மற்றவர்களுக்கு நன்மை ஏற்படுமானால் நரகத்திற்குக் கூட செல்வதற்குத் தயாராய் இருங்கள். மரணம் வருவது உறுதியாக இருக்கும்போது ஒரு நல்ல காரியத்திற்காக உயிரை விடுவது மேல்.

✠ உலகில் நல்லவர்கள் பெரிய தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் முழுவதும் அனுபவிக்கிறது.

✠ உலகவாழ்வில் இருந்து தப்பி ஓட முயற்சி செய்ய வேண்டாம். வெற்றியோ தோல்வியோ போராடுங்கள்.

✠ பாமரன் பண்புள்ள்வனாகவும், பண்புள்ளவன் தெய்வமாகவும் உயர வேண்டும். இதுவே ஆன்மீகத்தின் பயன்.

✠ தெய்வீகத்தன்மை இல்லாமல் பெறும் மிதமிஞ்சிய அறிவும், ஆற்றலும் மனிதர்களை மிருகங்களாக்கி கீழ்நிலைக்குத் தள்ளிவிடும்.

✠ சுயநலம், சுயநலமின்மை இந்த இரண்டையும் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் வேறுஎந்தவிதமான வேறுபாடும் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி பிரதேச இ.கழக விளையாட்டு விழா















கரவெட்டி பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் அண்மையில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குனர் ஜ.தவேந்திரன் கலந்து கொண்டார்.

முதலாவது இடம்பெற்ற கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் கருணாகரன் இளைஞர்கழகத்தை 2:0 என்ற நேர் செற்களில் வீழ்த்தி நவஜீவன்ஸ் இளைஞர் கழகம் சம்பியன் பட்டத்தை வென்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற வலைபந்தாட்ட இறுதியாட்டத்தில் மனோகரா இளைஞர் கழக அணியை 23:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டது கலை மதி இளைஞர்கழக அணி.

மூன்றாவதாக இடம் பெற்ற உதைபந்தாட்டபோட்டியில் தண்டனை உதையில் நவஜீவன்ஸ் இளைஞர்கழகத்தை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை பெற்றுக் கொண்டது மனோகரா அணி.

கரவெட்டி பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவின் 2014 ஆம் ஆண்டுக்கான OVER ALL CHAMPION கிண்ணத்தையும் 21 புள்ளிகளை பெற்று தனதாக்கியது மனோகரா இளைஞர்கழக அணி. (க-23)

## தொண்டைமானாறு ஒற்றுமை வி.கழகத்தின் உதைபந்தாட்ட போட்டி முடிபுகள்

தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் சித்திரை புத்தாண்டைமுன்னிட்டும் விநாயகர் சனசமூகநிலையம் விநாயகர் மின்னமைப்பாளர்களுடன் இணைந்து மாபெரும் விளையாட்டுப்போட்டியின் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி முடிவுகள்.

முதலாவது போட்டி

இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் 4:1 அடிப்படையில் நியூட்டன் விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்றுள்ளார்கள்.

இரண்டாவது போட்டி

விண்மீன் A விளையாட்டுக் கழகம் 2:0 அடிப்படையில் யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்றுள்ளார்கள்.

மூன்றாவது போட்டி

கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகம் 2:1 அடிப்படையில் நெடியகாடு A விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்றுள்ளார்கள்.

நான்காவது போட்டி

அல்வாய் பாரதி B விளையாட்டுக்கழகம் 5:4 அடிப்படையில் உடுப்பிட்டி யுத் B விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்றுள்ளார்கள்.

ஐந்தாவது போட்டி

நெடியகாடு B விளையாட்டுக் கழகம் 4:3 அடிப்படையில் கலைவாணி விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்றுள்ளார்கள்.

ஆறாவது போட்டி

கரவை சுடர் A விளையாட்டுக் கழகம் 1:0 அடிப்படையில் திக்கம் A விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்றுள்ளார்கள். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# உடுவில் பிரதேச இ.கழக கரப்பந்து; இணுவில் கலைஒளி மன்றம் சம்பியன்



உடுவில் பிரதேச இளைஞர் கழகத்தின் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இணுவில் கலைஒளி மன்றம் இளைஞர் அணி சம்பியனாகியுள்ளது.

உடுவில் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டிகள் மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் இணுவில் கலைஒளி மற்றும் சுன்னாகம் நியூ வொரியர்ஸ் அணிகள் மோதின. முதல் செற்றினை 25:12 என சுன்னாகம் நியூவொரியர்ஸ் இளைஞர் அணி கைப்பற்றிய போதும் இரண்டாம் மற்றும் மூன்றாம் செற்றுகளை முறையே 25:16, 25:23 புள்ளிகள் அடிப்படையில் இணுவில் கலைஒளி மன்ற இளைஞர் அணி தனதாக்கி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டது. (கு)

## ஆலடி சிந்து வி.கழகத்தின் தடை நீக்கப்பட்டது

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தால ஆலடி சிந்து விளையாட்டுக் கழகத்திற்கு மேற்கொள்ளப்பட்ட தடை விலக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன். அளவெட்டி கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் தாச்சி போட்டிகளை நடத்தி வருகின்றது.

இப் போட்டிகளின் போது போட்டிகளுக்கு குழப்பம் விளைவிக்கும் விதமாக ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் செயற்பட்டது.

இதனையடுத்து யாழ்.மாவட்ட தாச்சி சங்க தலைவர் தலைமையில் கூடிய ஒழுக்காற்று குழு குறித்த ஆலடி சிந்து விளையாட்டுக் க்ழகத்திற்கு 6 மாதம் போட்டிகளில் பங்கேற்க தடையும் 6000ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது.

எனினும் இதனையடுத்து ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் தவறிற்காக மன்னிப்பு கோரியதனைத் தொடர்ந்து அவர்கள் மீதான 6 மாத தடை விலக்களிக்கப்பட்டுள்ளதுடன் 6000ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. (க-23)



வவுனியா சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய 17 வயதுக்குட்பட்ட பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் வெற்றி பெற்ற மடுக்கந்த மகாவித்தியாலயத்திற்கு வலயக்கல்விப் பணிப்பாளரும் இரண்டாமிடம் பெற்ற வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்திற்கு கழகத்தின் போசகர் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும் வவுனியா மகாவித்தியாலயத்தின் விளையாட்டுத்துறை ஆசிரியர் ந.சுந்தரராங்கனுக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரும் கழகத்தின் போசகருமான இ.பிரதாபன் நினைவுச்சின்னம் வழங்குவதையும் இரு பாடசாலை அணி வீரர்களையும் படங்களில் காணலாம். (க-250-266)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இருபது-20 ஓவர் உலகக் கிண்ணம் : சிம்பாவேயை வீழ்த்தியது அயர்லாந்து



பங்காளதேஷில் நடைபெற்று வரும் 5-வது உலகக்கிண்ண 20 ஓவர் கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டத்தில் நேற்று சிம்பாப்வே அயர்லாந்து அணிகள் சில்கோட்டில் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய சிம்பாப்வே 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 163 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக அணித தலைவர் பிரெண்டன் ரெய்லர் 59 ஓட்டங்கள் எடுத்தார்.

பதிலுக்கு களமிறங்கிய அயர்லாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஸ்டிர்லிங் 9 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட 60 ஓட்டங்களும், போட்டர்பீல்ட் 31 ஓட்டங்களும் எடுத்தனர்.

பின்னர் அயர்லாந்தின் விக்கெட்டுகள் அடுத்தடுத்து வீழ்ந்ததால் ஆட்டம் சிம்பாவே பக்கம் திரும்பியது.


ஆனால் பின் வரிசை வீரர்கள் பொறுப்புடன் ஆடியதால் ஆட்டம் மீண்டும் அயர்லாந்து வசமானது. கடைசிப்பந்தில் வெற்றி இலக்கை எட்டிய அவ்வணி 3 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றியைருசித்தது.

சிம்பாப்வே தரப்பில் பன்யாங்கார 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். போட்டியின் நாயகனாக அயர்லாந்து அணியின் போட்டர்பீல்ட் தெரிவானார். இவ்வெற்றி மூலம் அயர்லாந்து அணி 2 புள்ளிகளை கைப்பற்றியது. (க)

## ஜெயவர்த்தன ஓய்வு

பங்காளதேஷில் நடந்து வரும் 20 ஓவர் உலக கிண்ணத் தொடருடன் சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட் டில் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக இலங்கை அணியின் விக்கெட்காப்பாளர் சங்கக்கர அறிவித்திருந்தார்.

சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்றாலும், மற்ற வரை நடைபெற்ற அனைத்து 20 ஓவர் உலகக் கிண்ண தொடரிலும பங்கேற்றுள்ளார். இந்த உலகக் கிண்ணத்தொடர் அவர் விளையாடும கடைசி தொடராகும். கடைசியாக நடந்த உலகக்கிண்ண தொடரில் ஜெயவர்த்தன தலைமையிலான இலங்கை அணி, இறுதிப்போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியிடம் தோல்வியடைந்தது.



வகையான 20 ஓவர் போட்டிகளில் (ஐ.பி.எல். போட்டி உள்ளிட்டவை) விளையாட விரும்புவதாகவும் அவர் கூறியிருந்தார்.

அவரைத் தொடர்ந்து இலங்கையின் முன்னணி வீரர் மஹேல ஜெயவர்தனவும், உலகக்கிண்ண போட்டிக்குப் பிறகு சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்துள்ளார். 36 வயதான ஜெயவர்த்தன இது

இதுவரை 49 சர்வதேச 20 ஓவர் போட்டிகளில் விளையாடியுள்ள ஜெயவர்த்தன 1335 ஓட்டங்கள் (சராசரி 31.78) எடுத்துள்ளார்.

2010-ல் நடந்த உலகக்கிண்ணத் தொடரின்போது, சிம்பாப்வே அணிக்கு எதிராக சதம் (100) அடித்ததே அவரது அதிகபட்ச ஓட்டமாகும். சர்வதேச 20 ஓவர் போட்டிகளில் 8 அரைச் சதங்களும் அடித்துள்ளார். (க)

## நெதர்லாந்து அணி வெற்றி

ஐக்கிய அரபு எமிரேட்ஷ் அணிக்கு எதிரான இருபது-20 போட்டியில் றொம் கூப்பரின் சகலதுறை பிரகாசத்தால் நெதர்லாந்து அணி 7 பந்துகள் மீதமிருக்கையில் 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

5-வது உலகக்கிண்ணத் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது. இதன்முதல் சுற்றுப் போட்டிகளின் 4-வது போட்டி நேற்று நெதர்லாந்து - ஐக்கிய அரபு எமிரேட்ஷ் அணிகளுக்கு இடையில் சியல்கொட்டில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஐக்கிய அரபு எமிரேட்ஷ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 19.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக அன்வர் 32, அணித் தலைவர் குரம் கான் 31 ஓட்டங்களையும் எடுத்தனர்..

பந்துவீச்சில் நெதர்லாந்து அணி சார்பாக ஜமில் 3 விக்கெட்டுக்களையும், கூப்பர், கேற்ரன் ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும்கைப்பற்றினர்.

152 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணிக்கு ஆரம்ப வீரர்களான ஸ்ரீபன் மை



போர்க் - மைக்கல் ஸ்வேர்ட் இணை அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இவர்கள் இருவரும் தமக்கிடையில் 6.4 ஓவர்களில் 69 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது, ஸ்வேர்ட் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இவர்கள் அமைத்துக் கொடுத்த அடித்தளத்தை தொடர்ந்து துடுப்பாட வந்த வீரர்கள் கெட்டியாக பிடித்துக் கொண்டனர்.

இதன்காரணமாக நெதர்லாந்து அணி 18.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக மைபோர்க் 55, கூப்பர் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஷின் பந்துவீச்சில் ஷசாட் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக றொம் கூப்பர் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் நெதர்லாந்து அணி 2 புள்ளிகளை கைப்பற்றியது. (க)

## அமெரிக்க...

விரிவாக விவாதிக்கப்பட்டது.

இதன்போது கூறப்பட்ட கருத்துகள் மற்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அடிப்படையாக வைத்து, இரண்டாவது வரைபு திருத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டாவது வரைபில், ஐ.நா மனிதஉரிமை ஆணையாளரினால், இலங்கையில் இடம் பெற்ற மீறல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தெளிவாக கோரப்பட்டுள்ளது.

முன்னைய வரைபைவிடவும், இறுக்கமான இந்த இரண்டாவது வரைபு மேலும் வலுவாக்கப்படும் என்று மேற்கு நாடுகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. (செ-11)

# இன்டியன் வெல்ஸ் டென்னிஸ் : ஜோகோவிச் சம்பியன்

அமெரிக்காவின் இன்டியன் வெல்ஸ்நகரில்பி.என்.பி பரிபாஸ்ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், செர்பியாவின் நோவக் ஜோகோவிச் ஆகியோர் மோதினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் செட்டை ஜோகோவிச் 3:6 என இழந்தார். பின்னர் எழுச்சி பெற்ற அவர் அடுத்தடுத்து இரண்டு செட்களையும் பெற்றார். இதனால், 3:6, 6:3, 7:6 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்ற ஜோகோவிச் சம்பியன் கோப்பையை கைப்பற்றினார். இது அவருக்கு 3-வது இண்டியன் வெல்ஸ் ஓபன் பட்டம் ஆகும்.

மகளிர் பிரிவில் ரஷ்யாவின் பிளேவியா பென்னிட்டா, உலகின்



மூன்றாம் தரநிலை வீராங்கனையான ரத்வன்ஸ்காவை (போலந்து) 6:2, 6:1 என்ற நேர்செட்களில் வென்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இதுவே பென்னிட்டா தனது வாழ்நாளில் வென்ற மிகப்பெரிய பட்டம் ஆகும். இத்தொடரில் இந்தியாவின் சானியா மிர்சா- செக்குடியரசின் காரா பிளாக ஜோடி சிறப்பாக விளையாடி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ஆனால், இறுதிப்போட்டியில் சு-வெய்- பெங் ஷூவாய் ஜோடியிடம் தோல்வியடைந்து இரண்டாம் பரிசை வென்றது குறிப்பிடத்தக்கது. (க)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**கந்தவனம் சோமசுந்தரம்**

(ஓய்வுபெற்ற அதிபர்)

சென்.ஜோன் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் திரு.சோ.ஈழநேசன் அவர்களின் அன்புத் தந்தையார் கந்தவனம் சோமசுந்தரம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மாவட்ட ஆணையாளர்,**
**உத்தியோகத்தர்கள்**
**மற்றும் அங்கத்தவர்கள்**
**சென்.ஜோன் அம்புலன்ஸ்,**
**யாழ்.மாவட்டம்.**

(5846)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதான மனித...

ஜெயக்குமாரி கைதுசெய்யப்பட்டபோது தர்மபுரம் பகுதியில் நடந்த சம்பவங்கள் பற்றி இவர்கள் தகவல்களைத் திரட்டச் சென்றிருந்த வேளையிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தைக் கோரியிருக்கின்றது.

காணாமல் போயுள்ளவர்களுக்காக அவர்களது உறவுகள் போராடினால் கடத்தப்படலாம் அல்லது கைதுசெய்யப்படலாம். அதேபோன்று பாதிக்கப்பட்டவர்களுக்காக மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் செயற்பட்டாலும் அவர்களும் கைதுசெய்யப்படலாம் அல்லது காணாமல் போகச் செய்யப்படலாம் என்பதை வெளிப்படுத்துவதாகவே கிளிநொச்சியில் நடைபெற்று வருகின்ற சம்பவங்கள் அமைந்திருக்கின்றன. இத்தகைய செயற்பாடுகளை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்." என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கைது நடவடிக்கையானது, இலங்கை அரசியலமைப்பில் பொதுமக்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ள நடமாடும் சுதந்திரத்தை மீறுவதாக அமைந்திருக்கின்றது என்று மனித உரிமைகளுக்கும் ஆய்வுக்குமான நிலையமும், நீதியும், நேர்மையானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பும் குற்றம் சுமத்தியிருக்கின்றன.

இந்த அமைப்புக்களின் பணிப்பாளராகிய கீர்த்தி தென்னக்கோன் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில், "இலங்கையில் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் தன்னிச்சையாக ஒருவரைக் கைதுசெய்து தடுத்துவைக்கும் கலாசாரத்தை ஊக்குவிப்பதாகவும், வலிந்து வாக்குமூலங்களைப் பதிவுசெய்யும் கலாசாரத்தையும் ஊக்குவிக்கவும், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் 48 மணித்தியாலங்கள் ஒருவரைத் தடுத்து வைக்கலாம் என்ற சட்டத்தின் பாரதூரமான விளைவுகளை எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்திருக்கிறது என சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐநாவின் மனித உரிமைகள் அவையில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணையொன்று கொண்டுவரப்படவுள்ள சந்தர்ப்பத்தில் மிகவும் முக்கியமான மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இருவரைக் கைதுசெய்திருப்பதானது, இலங்கையின் மனித உரிமைச் செயற்பாட்டு நிலைமைகள் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று அவசியம் என்ற சர்வதேச அழுத்தத்தை மேலும் அதிகரிக்கவே வழிகோலியுள்ளது என்றும் கீர்த்தி தென்னக்கோன் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார். (செ-11)

## அமலனின் உடல்...

ருந்தனர்.

பொன்னண்ணிகளின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரிக்குமிடையிலான ஒருநாள் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற போது பார்வையாளராக சென்றிருந்த சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனும் 24 வயதேயான இளம்குடும்பஸ்தருமான ஜெயரட்ணம் அமலன் மைதானத்தில் வைத்து 50 இற்கும் மேற்பட்ட நபர்களினால் அடித்து படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவரது சடலம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள அவரது வீட்டில் இருந்து எடுத்துவரப்பட்டு சென். பற்றிக்ஸ் கல்லூரியிலுள்ள தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வும் நடைபெற்றது.

அதனையடுத்து அவரது உடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதன்போது அமலனின் உறவினர்கள் , பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் என ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அத்துடன் பொலிஸாரின் பாதுகாப்புடனேயே அவரது இறுதிக் கிரியைகள் அனைத்தும் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)


பதவி வெற்றிடம்

Customer relations Manager
(வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்)
(ஆண் / பெண்)

கல்வித் தகைமை :- ஆங்கில அறிவு மிகமுக்கியம்.
பட்டதாரி / டிப்ளோமாதாரிகளுக்கு முன்னுரிமை
வேதனம் :- மாதம் 20 000 /- EPF, ETF இதில் அடங்கும்)
2 வருட சேவை ஒப்பந்தம்.
சனி, ஞாயிறு வேலை நாளாகும்.
வார நாட்களில் ஒருநாள் ஓய்வு வழங்கப்படும்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயணம் செய்யக் கூடியவர்கள் மாத்திரம் வரவும்.

நேர்முகத் தேர்வு 20.03.2014 - பி.ப. 5.30 மணிக்கு நடைபெறும்

Ms.V.இந்துஜா
பொது முகாமையாளர்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு :-
021 2230 604, 021 4993 501

(C-6765)


## சிறுவர் ...

மாவட்ட பொது வைத்திய சாலையிலிருந்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்ட விபூசிகாவை பொறுப்பேற்க பல சிறுவர்கள் இல்லங்கள் முன்வந்த போதும் நீதவான் வஹாப்தீன கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்லத்திற்கு அனுமதித்துள்ளார். (செ-250)


★ நியூசிலாந்தில் படிக்க உழைக்க IELTS தேவையில்லை
2 வருடங்களில் PR பெற்றால் ஆஸி பறக்கலாம்
★ கனடாவில் படிக்க உழைக்க வெறும் 23 இலட்சங்கள்
★ இத்தாலி சட்டரீதியாகச் செல்வது எளிது
★ ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படித்து மாதம் ஒரு இலட்சம் வரை உழைக்கலாம்.
★ எல்லா நாடுகளிற்கும் Visit Visa, Refusal சட்ட ஆலோசனைகள்
★ ஆஸ்திரேலியா குடும்பமாகச் செல்ல பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டிய தேவையில்லை.

( யாவும் நிபந்தனைகளுடன்)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 2219016, 021 4993501
www. thisaivisa.com

(C-6771)


## தண்டனை...

காட்டியுள்ளதாக தி ஹிந்து ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொறுப்புக்கூறல் இன்றி நீண்டகால சமாதானத்தை எட்டுவது இலங்கைக்கு மிகவும் கடினமானதொரு விடயம்.

பல்வேறு நாடுகளும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சரியான பாதையில் பயணிப்பதற்கு உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுவது முக்கியத்துவம் வாய்ந்தது.

இரண்டாவதாக, சுயாதீனமான, நியாயமான உள்ளக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட இரண்டு பிரேரணைகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதற்கும், மனித உரிமைகளுக்கான ஆணையாளரினால் முன்வைக்கப்பட்ட உதவிகளை பெற்றுக் கொள்வதற்கும் இலங்கை அரசாங்கம் தவறியுள்ளது.

இலங்கையினால் 2010 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இந்த விடயங்கள் குறித்து பொருத்தமான கவனம் செலுத்தவில்லை.

பரிந்துரைகளை அமுல்படுத்தி, இலங்கை நம்பகத் தன்மை வாய்ந்த முன்னேற்றத்தினை அடைந்திருந்தால், தற்போதுள்ள நிலைமை ஏற்பட்டிருக்காது. சர்வதேச நடவடிக்கைக்குப் பதிலாக, கடந்தகால வன்முறைகளுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்திருப்போம் என அவர் குறிப்பிட்டார்.

மூன்றாவதாக, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சர்வதேச பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பதற்கு, சர்வதேச சமூகத்திடம் நடவடிக்கை எடுக்குமாறு கோருவதற்கும், சமாதான ஆர்வலர்கள் உள்ளிட்ட பல்வேறு சுயாதீனமானவர்களுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட இலங்கையின் முக்கிய தமிழ் கட்சிகளின் ஆதரவு காணப்படுவதாக வில்லியம் ஹேக் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் யுத்தகாலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் வன்முறைகளுக்கு தண்டனைகள் வழங்கப்படுதல் இலங்கையின் சட்டவாட்சியை வலுப்படுத்தும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் பாதுகாப்பு உரிமை காணப்படுவதுடன், எவரும் சட்டத்திற்கு மேலாக செல்வதற்கு இடமளிக்கப்படகூடாதென்ற செய்தியை சர்வதேச சமூகம் தெரிவிக்க வேண்டுமெனவும் பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மீனவர்கள் ...

கடற்படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை விடுதலை செய்யப்பட்ட மேற்படி 140 இந்திய மீனவர்களும் அவர்களின் படகுகளில் இந்தியாவைச் சென்றடைந்துள்ளனர் என யாழிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் உதவித் துணைத்துாதுவர் எஸ். டி. மூர்த்தி தெரிவித்தார்.

இதில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவானால் விடுதலைசெய்யப்பட்ட 116 இந்திய மீனவர்களும் மன்னார் நீதவான் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட 24 மீனவர்களும் உள்ளடங்குகின்றனர். (செ-6)

## ஜெனிவா மாநாட்...

உரிமைகள் மாநாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்தும் குறித்த ஆர்ப்பாட்ட பேரணி இடம் பெற்றது.

குறித்த ஆர்ப்பாட்ட பேரணியினை மன்னார் மக்கள் ஒன்றியம் என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒரு தொகுதி மக்கள் மன்னார் பிரதான பாலத்தில் இருந்தும், மேலும் ஒரு தொகுதி மக்கள் மன்னார் விளையாட்டு மைதான வீதியில் இருந்தும் ஊர்வலமாக மன்னார் பஸார் பகுதியை வந்தடைந்தனர்.

இவர்கள் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டிற்கு எதிராக எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும், இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்த கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின் ஊர்வலமாக சென்று மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன் கோஷங்களை எழுப்பினர்.

இந்த நிலையில் மன்னார் நகர சபை உறுப்பினர் என்.நகுசீன் தலைமையிலான குழுவினர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

இதனால் நீண்ட நேரம் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுவதற்கு தென் பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும், மன்னார் சௌத்பார் கடற்பரப்பில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்த நீர்கொழும்பைச் சேர்ந்த சிங்கள மீனவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் என சுமார் 300 பேர் வரை குறித்த ஆர்ப்பாட்டத்திற்காக அழைத்து வரப்பட்டதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (செ-11)

## ஜெயக்குமாரி...

என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணியளவில் வடக்கு மாகாணசபையின் 7 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதனையடுத்து மாகாண சபையின் முன்பாகவும் யாழ்.பிரதான பஸ்தரிப்பிடத்திலும் இந்த கண்டனப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

நேற்று பிற்பகல் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் தலைமையில் அவரது வாசஸ்தலத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே மேற்படி முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்தப்போராட்டத்தின் போது,

கடந்த 13 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில், ராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட பாலேந்திரன் ஜெயக்குமாரி மற்றும் அவரது 13 வயதேயான மகள் விபூசிகா ஆகியோரை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று பிரதானமாக வலியுறுத்தப்படவுள்ள அதேவேளை வடக்கில் தொடரும் சட்டவிரோத கைது நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கமும் படைத்தரப்பினரும் நிறுத்த வேண்டுமெனவும் இந்த விடயத்தில் சர்வதேச நாடுகள் கூடியகவனம் செலுத்தி தமிழருக்கு கெதிரான அடக்கு முறைகளைக்கட்டுப் படுத்த முன்வரவேண்டுமெனவும் கோரிக்கை விடப்படவுள்ளது.

இதனைவிட வடக்கிலிருந்து இராணுவம் உடனடியாக வெளியேற்றப்படவேண்டும், இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீள்குடியேற்றப்படவேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளும் முன்வைக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)


அரச துறை, தனியார் துறை மற்றும் NGOகளில் தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு..
கோலாசிற்றி 021 320 2787 தொழில் வங்கி
224/1. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)
இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்

நீங்கள் தயாரிக்கும்,
உங்கள் பொருட்களைச் சந்தைப் படுத்த வேண்டுமா?
உடன் நாடுங்கள்
Winstar 11, Champion Lane, Kokuvil. Tel : 021 3202789
(5844)

பணியாள் தேவை
செல்வா ரெலி கொமினிகேசன்
124, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
மேற்படி நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பெண் பணியாள் தேவை, கணனி அறிவுள்ள ரைப் செற்றிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
நேரில் வரவும்
T.P :- 0777 193 173
(5826)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org